For private circulation only

Book Post

https://christianhistoricalsociety.in/

# கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

டிசம்பர் 2023

திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும்

விலை : ரூ 60 • இதழ் 43





ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் வாழ்த்துக்கள்.

உபாகமம் 32; 7ல் 'பூர்வநாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைக் கவனித்துப்பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான்; உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள்' என்ற வார்த்தை இஸ்ரவேல் ஜனங்களுக்கு சொல்லப்பட்டது. அன்று பூர்வநாட்களை அறிந்து அதனை தங்கள் பிள்ளைகளுக்கு கற்று கொடுப்பது ஒவ்வொரு தகப்பனின் கடமையாக இருந்தது. ஆனால் இன்று அவசர உலகத்தில் பலர் இந்த கட்டளையை மறந்துப் போனவர்களாக இருக்கின்றோம். இன்றைக்கு இந்த உன்னதமான பணியினை, கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் நிறைவேற்றி வருகின்றது.

உறுப்பினர்கள், வாசகர்கள் அனைவருக்கும் இனிய கிறிஸ்துபிறப்பு வாழ்த்துக்களை சங்கத்தின் சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வருடம் முழுவதும் நம்முடைய மாத ஆய்விதழை மிக சிறப்பாக வெளிக்கொண்டு வரவும், அநேக புதிய நூல்களை வெளியிடவும், மறுபதிப்பு செய்யவும் பராபரன் உதவி செய்தார். சங்கத்தின் முக்கிய பயணமாக நூல்களையும் கலைப் பொருட்களையும் பாதுகாக்கவும் கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் முதல் பணியாக வரும் டிசம்பர் 06 ம் தேதி தென்காசி மாவட்டம் சுரண்டையில் உள்ள கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க இடத்தில் நடைபெறும் கிறிஸ்தவ நூலகம், அருங்காட்சியகம் மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டு மையம் அமைக்க அடிக்கல் நாட்டும் விழாவிற்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எனவே உறுப்பினர்கள், தொடர்ந்து வரலாற்றுச் சங்க பணிகளுக்காக ஜெபிக்கவும், வாசகர்கள் இம்மாத ஆய்விதழை நண்பர்கள், உறவினர்களுக்கு அறிமுகப்படுத்தவும் கேட்டுக் கொள்ளுகின்றேன். ஒவ்வொரு மாதமும் இவ்விதழை பிரிண்ட் செய்து வெளியிடுவதற்கு மிகுந்த பொருட்செலவுகள் உண்டு, மாத சந்தாவை புதுப்பித்து கொள்ளும்படி அன்புடன் நினைவுபடுத்துகிறேன். முடியுமானால் காணிக்கையாகவோ அல்லது நன்கொடையாகவோ கொடுத்து தாங்க அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**பராபரனின் பணியில்**

*Manna Selvakumar*

**சுஜித் ரெக்ஸ்**
வடிவமைப்பு

**மன்னா செல்வகுமார்**
ஆசிரியர்

### மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

### வங்கி விபரம்

Name: Christian Historical Society
A/c Number : 1748 020000 4906
Bank name : Federal Bank
IFSC code: FDRL0001748

### தொடர்புக்கு

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

சந்தா விபரங்கள் இதழின் உள்ளே,
இது ஒரு வரலாற்றுச் சங்க உறுப்பினர்களுக்கான பதிப்பு

christianhistoricalsociety.in

தொடர்புக்கு +91 91767 80001



## வட கிழக்கு நெல்லை அப்போஸ்தலர்

# மிஷனெரி கனம். ஜேம்ஸ் பிளெமிங் கோர்ன்ஸ்

1825ம் ஆண்டு அயர்லாந்தில் பிறந்த Rev. J. F கோர்ன்ஸ் தனது இளம் வயதிலேயே கடவுள் பக்தி மிக்கவராக வளர்க்கப்பட்டார். தனது வாலிப வயதில் மிஷனெரி பணியின் அழைப்பை ஏற்று 1849 ம் ஆண்டு இந்தியா வந்தார். இடையன்குடியில் பேராயர் கால்டுவெல் அவர்களிடம் 1849-1854 வரை சபை ஊழியராக பயிற்சி பெற்றார். 12. 03. 1854 ல் உதவி குரு (டீக்கன்) பட்டம் பெற்று முதலூரில் பணி செய்தார். 24. 03. 1855 ஹேனா எலிசபெத் ராபர்ட் எண்பாரை திருமணம் செய்து கொண்டார். J. F கோர்ன்ஸ் - ஹேனா தம்பதியருக்கு 10.08.1855 அன்று மேரி எமிலிபார்ன் என்ற மகள் பிறந்து எட்டு மாதத்தில் 26.04.1856ல் கர்த்தருக்குள் மரித்து தூத்துக்குடியில் அடக்கம் செய்யப்பட்டாள். இதற்கிடையே பணிமாற்றம் செய்யப்பட்டு 1855-56வரை சாயர்புரத்தில் பணி செய்தார்.


இதன் பிறகு 29.09.1856 ல் எட்வர்ட் வெஸ்லி பிளஸ்ஸிங் என்ற மகனும், 11.08.1858 இல் வெண்ணி அமெல்யா என்ற மகளும் 18.06.1861 ல் ஆர்தர் என்ற மகன் உட்பட மூன்று பிள்ளைகள் பிறந்தனர். S. P. G மிஷனின் ஜில்லாவாக (தலைமை இடம்) இருந்த புதியம்புத்தூரை மையமாக வைத்து 1856 முதல் 1873 வரை பணி செய்தார். இங்கு வெண்ணி அமெல்யா என்ற மகளுக்கு 17. 10. 1858 அன்று புதியம்புத்தூரில் வைத்து திருமுழுக்கு கொடுக்கப்பட்டது.

புதியம்புத்தூரை மையமாக வைத்து 17 ஆண்டுகள் பணி செய்ததன் விளைவாக புதியம்புத்தூர், நாகலாபுரம், புதூர், ஆற்றங்கரை, விளாத்திகுளம், குளத்தூர், தருவைகுளம், தூத்துக்குடி வடக்கூர் என பல சபைகள் உருவாகின.

1830 களில் புதியம்புத்தூர், எட்டையாபுரம் ஜமீன் எல்லைக்குள் இருந்தது. ஜமீன் கிறிஸ்தவர்களை பிடித்து அடித்து பற்பல கொடுமைகளுக்கு உட்படுத்தினார். கிறிஸ்தவர்களில் அநேகர் மறுதலித்து போயினர். எஞ்சிய சிலர் ஊரை விட்டு ஓடி விட்டார்கள். கிறிஸ்தவ சமயத்தை வேரோடு பிடுங்கி எறிவதே அவர்களது நோக்கமாய் இருந்தது. பணி செய்துவந்த பிறகு இந்த எதிர்ப்புகள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்தது.

01. 11. 1861 ல் வருகை புரிந்த S. P. G யின் பொதுச் செயலாளர் A.R. சிமொண்ட் (SYMONDS) புதியம்புத்தூர் அருப்பணித்தளம் தனி ஒரு நபரால் மட்டும் சந்திக்கப்படுவது கடினமானது. ஆனால் Rev . J. F கோர்ன்ஸ் மிக சிறப்பாக இங்கு ஊழியம் செய்து வருகிறார் என்று பாராட்டினார்.

1856 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ஆம் நாள் வேப்பலோடை சபையை சந்தித்து விட்டு குருவார்பட்டியை நோக்கி பயணப்படுகின்றார். அன்று இரவு வைப்பார் கிராமத்தில் இராத்தங்க ஏற்பாடு. ஊர்வந்து சேர்வதற்குள் மழை பெய்ய ஆரம்பித்துவிட்டது. கொட்டும் மழையில் நடுநசிவரை நனைந்து கொண்டிருந்த Rev. J. F. கோர்ன்ஸ் ஐயர் ஊர் பெரியவர் வீட்டிற்குள் அழைக்கப்படுகிறார். ஏராளமான மக்கள் வீட்டுக்குள் கூடி வர பின் இரவில் ஆரம்பமான உரையாடல் விடிய விடிய செல்கின்றது. சுவிசேஷம் பிரபல்யம் அடைந்தது. கோடை பகலில் கடுமையாக






ஊழியம் செய்துவிட்டு இரவில் கண்ணயரலாம் என்று நினைத்திருக்கலாம். சுவிசேஷத்திற்காக கண் விழிப்பும் சமயம் கிடைக்கும் பொழுதெல்லாம் தேவ ராஜ்ஜியத்தின் செய்தியை களைப்பின்றி சொல்வதும் அவர்களின் வாழ்வாக இருந்தது. மழையோ இரவோ தூக்கமோ களைப்போ ஆகிய யாதொன்றும் Rev. J. F. கேர்ன்ஸ் ஐயர் அவர்களின் ஊழியத்தை நிறுத்த முடியவில்லை.

1856 ஆம் ஆண்டு Rev . J. F. கேர்ன்ஸ் ஐயர் நாகலாபுரம் புதூர் செல்லுகின்றார். புதியதாக ஏராளமான மக்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டனர். இதைக் கண்டு ஜமீன்தாருக்கு மிகுந்த கோபம். வாலிபன் ஒருவனுக்கு குடிக்க போதை தரும் பானம் ஒன்றை வாங்கி கொடுத்து ஊழியரையும் சபையாரையும் மிரட்டி விரட்டி விட ஏவி விடுகின்றார். வாலிபனும் நன்றாக குடித்து அவர்களை கெட்ட வார்த்தையில் பேசிக்கொண்டே விரட்ட வருகின்றான். சபையார் அந்த வாலிபன் குருவானவரை தாக்கி விடக்கூடாது என்று அச்சப்பட்டவர்களாக அருகில் வருகின்றனர். அப்பொழுது Rev . J. F. கேர்ன்ஸ் ஐயர் அவர்கள் சபையாரை பார்த்து அந்த வாலிபனை ஒன்றும் செய்து விடாதீர்கள். நீங்கள் இதில் தலையிடாதீர்கள். என்னை தாக்கினால் பரவாயில்லை, என்று சத்தமாய் சொல்லுகின்றார். இதைக் கேட்ட வாலிபன் நிலை தடுமாறினவனாய் நிற்கின்றான். உடனே அவன் தன்னை ஏவி விட்டவர்களை நோக்கி வேகமாக கெட்ட வார்த்தைகளை பேசிக்கொண்டே ஓடுகின்றான். இந்த நிகழ்வுக்கு பின்னர் அந்த ஜமீன்தார் Rev . J. F. கேர்ன்ஸ் ஐயர் அவர்கள் புதூருக்கு வரும் பொழுதெல்லாம் அவர்களை மிகுந்த மரியாதையுடன் நடத்துகின்றார். மனதிலே உறுதியும், உள்ளத்திலே தைரியமும் கொண்ட வீராதி வீரர்களால் மட்டுமே அடி வாங்க துணிந்து நிற்க முடியும், ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தையும் காட்டி நிற்பது தானே கிறிஸ்தவம்.

தூத்துக்குடியில் இருந்து ஐரோப்பியர்கள் ஒரு பள்ளியை தொடங்கி நடத்தினார்கள். அதை 1858 ல் SPG மிஷினிடம் ஒப்படைத்தனர். SPG Anglo Vernacular School என அழைக்கப்பட்ட பள்ளியை (தற்போதைய கால்டுவெல் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் இருந்தது) குறித்து தனது 1859 ஆம் ஆண்டு SPG க்கு அளித்த அறிக்கையில் திருநெல்வேலி மிஷினில் இதைவிட நல்ல பள்ளி வேறொன்றுமில்லை. நான் மாதம் மும்முறை இப்பள்ளியை பார்வையிடுகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

1858ம் ஆண்டு புதியம்புத்தூர் மிஷன் மாவட்டத்தின் உறுதியான சபையாக தூத்துக்குடி வடக்கூரில் சபை தோன்றியது. 1861 இல் இருந்து தூத்துக்குடியில் வாழ்ந்த பல இத்திருச்சபையில் இணைந்தனர். கூரை வேய்ந்த ஆலயம் இருந்த நேரத்தில் இவர்களுக்கு நல்ல ஆலயம் தேவை என்பதை 1868 இல் உணர்ந்து அரசிடம் விண்ணப்பித்து பணம் செலுத்தி பெற்றுக் கொண்டார். அதே ஆண்டு ஜூலையில் Rev J. F கேர்ன்ஸ் புதிய ஆலயத்திற்கு அஸ்திவாரம் இட்டார். புதியம்புத்தூரில் தலைமை உபதேசியாக இருந்த திரு D ஞானப்பிரகாசம் என்பாரை தூத்துக்குடி சபை குருவாக நியமிக்க Rev. J. F கேர்ன்ஸ் சிபாரிசு செய்தார். அதன்படி 31. 01. 1868 ல் திரு. D ஞானபிரகாசம் அவர்களுக்கு பேராயர் பிரட்ரிக் ஜெல் அவர்களால் பாளையங்கோட்டை தூய திரித்துவ பேராலயத்தில் குரு பட்டம் கொடுக்கப்பட்டது. 02. 02. 1869ல் தூத்துக்குடி தனி சேகரமானது. வடக்கூரில் கட்டப்பட்ட ஆலயத்தை கேர்ன்ஸ் அவர்களின் சொந்த தேசமாகிய அயர்லாந்தின் அப்போஸ்தலர் என்று அழைக்கப்பட்ட தூய பேட்ரிக்கின் பெயரை வைத்து பேராயர் 19. 01. 1973 அன்று பிரதிஷ்டை செய்தார்.






Rev. J. F கோர்ன்ஸ் 1872ம் ஆண்டு S.P.G தலைமையகத்திற்கு எழுதிய ரிப்போர்ட் ஒன்றில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

I am now completing a neat and substantial norman church in Tuticorin and hope to have it opened in the first week of February for divine worship. The building is quiet and ornament to the town and is regarded by the native with pardonsble pride. It is through will build, but to me the most interesting feature in it is that I build this without putting the society to as much as the expenses of sixpence. The church will be known as the St. Patricks church.

நாகலாபுரம் திருச்சபைக்கும் தூய பேட்ரிக் ஆலயம் என்று அவர் பெயரிட்டார். 1903 ஆம் ஆண்டு முதல் அது திவ்ய உயிர்த்தெழுதலின் ஆலயம் என்று அழைக்கப்படுகிறது.

பின்பு 1873ம் ஆண்டு தஞ்சாவூருக்கு மாறுதலாகி அங்கு 1877 வரை 4 ஆண்டுகள் பணி செய்தார். 21.05.1874 இல் சென்னை பேராயர் Rev J. F கோர்ன்ஸ் அவர்கள் தஞ்சை வந்த பிறகு மீண்டும் மறுமலர்ச்சி ஏற்பட்டு அவருடைய அருட்பணியின் விளைவுகளால் அநேக கனிகளை காண முடிகிறது என்று குறிப்பிடுகிறார். 1877-ல் தஞ்சை கொடிய காலராவினாலும் பஞ்சத்தாலும் பாதிக்கப்பட்டது. 3000 க்கும் மேற்பட்ட மக்களுக்கு உணவு அரசால் ஒழுங்கு செய்யப்பட்டது. அப்பொழுது அருட்பணியின் தேவை அதிகமாக இருந்தது. இவர் பணியாற்றிய இடங்களிலும் பள்ளிக்கூடங்களிலும் உபதேசிமார்களுக்கான இறையியல் கல்லூரிகளிலும் Rev. J. F கோர்ன்ஸ் சிறப்பாக ஆசிரியர் பணியாற்றியுள்ளார்.

### Rev. J. F கோர்ன்ஸ் தனது வாழ்நாளில்

1. The Tribes of South India
2. The Cairns of tinnevely
3. AR SPG Tract
4. The Old Books.
5. Topographical notice of Tirunelveli
6. Introduction to panjalankurichi paligar and the state of Tirunelveli
7. Kalyan Satta anuku

### இது தவிர

1. ஆத்ம போத பிரகாசிகா
2. சில்பா சாஸ்த்திரா என சில நூல்களை தமிழிலும் மொழிபெயர்த்துள்ளார்.

இவர் மனைவி 6 மாதம் இங்கிலாந்துக்கு சென்றிருந்தார். அந்த சமயத்தில் ஆஸ்துமாவினால் சில மாதம் பாதிக்கப்பட்டு 09. 12. 1877 இல் தன்னுடைய 52 வது வயதில் பரிசுத்தவான்களின் வரிசையில் சேர்க்கப்பட்டார். தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னனின் மகள் இளவரசி விஜய மோகன முத்தாம்பாள் அம்மணி சாகேப் அவர்களுக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுத்ததால் Rev. J. F. கோர்ன்ஸ் அவர்களின் அடக்க செலவு முழுவதையும் மன்னன் ஏற்றுக்கொண்டு தஞ்சை தூய பேதுரு ஆலயத்தில் நினைவு கல்வெட்டையும், கல்லறை கல்வெட்டையும் வைத்தார்.

தஞ்சாவூர் தூய பேதுரு ஆலய வளாகத்தில் உள்ள கல்லறை தோட்டத்தில் சிதலமடைந்த நிலையில் காணப்பட்ட Rev . J. F கோர்ன்ஸ் அவர்களின் கல்லறை 2015 ஆம் ஆண்டு தூத்துக்குடி தூய பேட்ரிக் இணைப் பேராலயத்தின் சார்பில் புதுப்பிக்கப்பட்டு மரியாதை செய்யப்பட்டது.

தனது அயராத உழைப்பினால் அநேக சபைகளையும் அனேகமாயிரம் ஆத்துமாக்களையும் ஆயத்தப்படுத்திய Rev. J. F. கோர்ன்ஸ் 'வடகிழக்கு நெல்லை அப்போஸ்தலர்' என்றும் தூத்துக்குடி 'தூய பேட்ரிக் இணைப் பேராலயத்தின் தந்தை' எனவும் அழைக்கப்படுகிறார்.

வசதி நிறைந்த இடத்தில் பிறந்து ஏராளமாய் கல்வி கற்று ஒய்யாரமாய் வாழ வேண்டிய மிஷனரிகள் கிறிஸ்துவின் அன்பு நெருக்கி ஏவினதினால் வாழ்வாதாரத்தில் பின்தங்கி கிடந்த நம்மை தேடி இங்கு வந்தனர். சத்தியத்தை கற்றுத் தந்தனர். சத்தியத்தின் படி வாழ்க்கை நடத்தினர். அவர்களிடம் சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்ட நம் முன்னோர்கள் சுவிசேஷத்தின்படி வாழ்ந்தார்கள். ஆகவே இன்று நாம் சுகித்திருக்கிறோம். இனி வரும் காலத்தில் நம் பிள்ளைகள் வாழ்ந்திருக்க வேண்டுமானால் இன்று நாம் சத்தியத்தை படிக்க வேண்டும் அதன்படி நடக்க வேண்டும். சுவிசேஷத்தை விசுவாசிக்க வேண்டும். அதன்படி வாழ வேண்டும்.

Rev. J. F. கோர்ன்ஸ் ஐயர் அவர்களின் வாழ்கையின் நிகழ்வுகள் இன்றைய கிறிஸ்தவர்களாகிய நமக்கு நிருபங்களாக உள்ளதை மறுக்க இயலாது.

09. 12. 2023 அன்று Rev. J. F கோர்ன்ஸ் அவர்களது 146 ஆவது நினைவு நாளை ஆசரிக்கிறோம். Rev J. F கோர்ன்ஸ் அவர்களின் தியாகமான அர்பணிப்புள்ள வாழ்க்கைக்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். கர்த்தருக்காய் சாதிக்க பிரயாசப்படுவோம்.

**டேவிட் நோவா**
தூத்துக்குடி

# கனம் D. S. டேவிட் ஐயர்

**முனைவர்.பி.குட்டி ஜாஸ்கர் ஜெபராஜா**
போப் கல்லூரி, சாயர்புரம்



கனம் டேவிட் சாமுவேல் டேவிட்(Rev.D.S.David) ஐயாவர்கள் 1861 ஆம் ஆண்டு பெப்ருவரி 4 ஆம் தேதி மெய்ஞ்ஞானபுரத்தில் பிறந்தார்கள். இவர்கள் தகப்பனான கனம் யோசேப்பு தாவீது (Rev.-Joseph David) ஐயரவர்கள் ஐம்பது வருஷங்களுக்கு மேலாய் மெய்ஞ்ஞானபுரத்தில் சிறந்த ஊழியம் செய்து, சபைகளெங்கும் புகழ் பெற்றவர்கள். அவர்களுடைய சிரேஷ்ட புத்திரனான இவர்கள் மெய்ஞ்ஞானபுரம் பள்ளிக்கூடத்திலும் திருநெல்வேலி சர்ச் மிஷன் காலேஜிலும் படித்து மெற்றிக்குலேஷன் பரிட்சையிலும் தேறி, சில வருடம் ஸ்ரீவைகுண்டம், வேலூர், மெய்ஞ்ஞானபுரம் முதலிய இடங்களில் உபாத்தியாயராக இருந்து, தங்கள் ஊழியத்தை வெகு திறமையோடு நடத்தி வந்தார்கள். பின்னால் இராயப்பேட்டை C.M.S. வேதசாஸ்திர சாலையில் படிக்கும்படி தெரிந்து கொள்ளப்பட்டு, இரண்டு வருடம் அங்கு வெகு திறமையாய்ப் படித்துப் பரிசுகள் பெற்று, 1893 ஆம் ஆண்டு டீக்கன் பட்டம் பெற்றவுடன், விருதுநகரில் தங்கள் குருத்துவ ஊழியத்தை ஆரம்பித்தார்கள். மறு வருஷம் முழு பட்டம் பெற்று, ஸ்ரீவில்லிபுத்தூருக்கு மாற்றப்பட்டு, அங்கு மூன்று வருஷம் ஊழியம் செய்தார்கள். பின்னால் 15 வருடக் காலம் நல்லூரில் ஊழியம் செய்து, அந்தச் சர்க்கிளை அதிக முன்னேற்றத்துக்குக் கொண்டு வந்தார்கள்.




இந்தக் காலத்தில் திருநெல்வேலி டிஸ்டிரிக்ட் சர்ச் கவுன்சிலின் செக்ரட்ரீயாகவும் இருந்து பிரசித்தி பெற்றார்கள். கனம் P. G. சிமியோன் ஐயரவர்கள் மரிக்கவும், 1912 ஆம் ஆண்டு சுவிசேஷபுரத்துக்கு மாற்றப்பட்டார்கள். மறு வருஷம் தோர்ணக்கல் மாகாணத்தைச் சேர்ந்த சிங்கரேனி நிலக்கேணி மிஷனுக்கு ஒரு சரியான ஊழியர் வேண்டுமென்று மகா கனம் அசரியா அத்தியட்சர் அவர்கள் இவர்களைக் கேட்க, இவர்கள் தங்களையே அவ்வேலைக்கு ஒப்புக் கொடுத்து, நாலு வருஷம் சிங்கரேணியில் அதிகப் பிரயாசத்தோடும் சுய வெறுப்போடும் தன் ஊழியத்தை நடத்திவந்தார்கள். பின்னால் தன் சுய நாட்டுக்குத் திரும்பவே, மீண்டும் சுவிசேஷபுரத்திற்கே அனுப்பப்பட்டு, இரண்டு வருஷம் அங்கு குருத்துவ ஊழியம் நடத்தினார்கள்.

1918 ஆம் ஆண்டு மகா கனம் தோர்ணக்கல் அத்தியட்சரவர்கள் கேட்டுக் கொண்டதின் பேரில், தோர்ணக்கல் வேத சாஸ்திரக் கலாசாலைக்கு வார்டனாகத் தங்களை ஒப்புவித்து, குருத்துவ மாணாக்கர் சிலரை நாலு வருஷம் வெகு திறமையோடு பயிற்றுவித்து வந்தார்கள். வேற்று மொழியாகிய தெலுங்கு மொழியை வெகு சுலபமாய்க் கற்று, அதில் பாண்டித்திய மடைந்து,

அம்மொழியிலேயே போதிக்கவும் பிரசங்கிக்கவும் தக்கதான திறமையைப் பெற்றது மிகவும் பாராட்டத் தக்கது. அதன் பின்னர் அவர்கள் திரும்பவும் தங்கள் சுயநாட்டிற்கு வந்து, பண்ணைவிளை சர்க்கிள் சேர்மனாக இரண்டு வருடமும், மெய்ஞ்ஞானபுரம் சர்க்கிள் சேர்மனாக மூன்று வருடமும் தங்கள் ஊழியத்தை நடப்பித்து, 1933 ஆம் ஆண்டு தங்கள் 73-வது வயதில் பென்ஷன் பெற்றார்கள். இதற்கு முன்னாதாகவே அவர்கள் தமிழ் வேதாகமப் புதுத் திருத்தல் கமிற்றி மெம்பராக நியமிக்கப்பட்டு, அநேகத் தடவை அது விஷயமாய் ஏற்பட்ட கூட்டங்களில் ஆஜராகி, டாக்டர் லார்சன் ஐயருக்குச் சிறந்த ஆதரவளித்து, புதுத் திருத்தல் முற்றுப் பெறக் கருவியாயிருந்தார்கள். அதுவுமன்றி, தென் திருநெல்வேலி சர்ச் கவுன்சில் சேர்மனாகவும் நியமிக்கப்பட்டு, அத்தியக்ஷருக்கும், அத்தியாதீனத்திற்கும் அதிக உதவிபுரிந்து வந்தார்கள்.

ஒரு வருஷம் மெய்ஞ்ஞானபுரத்தில் இளைப்பாறின பிறகு, இந்திய மிஷனெரி சங்கக் கமிற்றிமாருடைய (I.M.S) வேண்டுகோளுக்கு இணங்கி, 1934 ஆம் ஆண்டு மீண்டும் அதின் கண்ணிய காரியதரிசி ஆனார்கள். தங்களுடைய முதிர்ந்த வயதிலும் இந்தக் கஷ்டமான வேலையை அதிக வாஞ்சையோடும் வைராக்கியத்தோடும் நடத்தி வந்தார்கள். இச் சங்கத்திற்கு ஏற்பட்டிருந்த சுமார் ரூ. 10,000/- கடனை நிவிர்த்தி செய்வதற்காகக் கடல் தாண்டி, மலேயா நாட்டிற்கும், பர்மா நாட்டிற்கும் கடினமாக பிரயாணம் செய்து, அங்குள்ளவர்களை உற்சாகப்படுத்தி, உதாரமாய்ப் பண உதவி செய்யும்படி ஏவி, எல்லாக் கடனும் நிவிர்த்தி யாவதற்கான வழி தேடினார்கள். திருநெல்வேலியிலும், சென்னை மாகாணத்திலும் மற்றப் பாகங்களிலும், இதன் விஷயமாய் இவர்கள் எடுத்த பிரயாசம் அதிகம், பின்னும் அவர்கள் மதுரைக்கும் கோவில்பட்டிக்கும் சென்று, இந்திய மிஷனெரி சங்க விஷயமாகப் பலரையும் உற்சாகப்படுத்தினார்கள். பின் ஆண்டு துவக்கத்திலும் முதலாம், மூன்றாம் தேதிகளில் பாளையங்கோட்டை திரித்துவ ஆலயத்தில் பணிவிடை செய்து, ஊக்கமான பிரசங்கம் செய்தார்கள். இவர்கள் கனிஷ்ட புதல்வி மலேயாவில் மரித்துப் போனதைத் தந்தி மூலமாய் அறிந்த போதிலும், அன்றையத் தினமும் தங்கள் வேலையைக் குறைவின்றி நடத்தி, மறுநாள் காலை ஓர் சிநேகிதனுடைய வீட்டைச் சந்தித்து,அங்கே பிறந்த நாள் ஸ்தோத்திர ஜெபம் செய்து, வீட்டுக்குத் திரும்பி தங்கள் ஆசனத்தில் உட்கார்த்திருக்கும் சமயம், சுமார் 11.30 மணிக்கு வாய்வுக் குத்து உபத்திரவம் தோன்ற, அதைப் பொறுமையாய்ச் சகித்து, ஒரு மணி நேரத்திற்குள் தன்னுடைய ஆவியைக் கர்த்தருடைய கரத்தில் ஒப்புவித்து, அவருடைய ராஜ்ஜியம் (07.01.1937) சேர்ந்தார்கள். அன்று இரவு இவர்களுடைய தேகம் பாளையங்கோட்டை பரி. திரித்துவ ஆலயத்துக்குக் கொண்டு போகப்பட்டு, மறு நாள் காலையில் அவர்கள் தகப்பனார், தாயார், மனைவி முதலியவர்கள் அடக்கம் பண்ணப்பட்டிருக்கும் மெய்ஞ்ஞானபுரம் கல்லறைத் தோட்டத்தில் சகல கிறிஸ்தவ மரியாதைகளுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது.

**'நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப் போல் பிரகாசிப்பார்கள்.' மத். 13:43.**


கிறிஸ்தவ
# வரலாற்றுச் சுவடுகள்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

**வங்கி விபரம்**

Name: Christian Historical Society
A/c Number : 1748 020000 4906
Bank name : Federal Bank
IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
'கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'
( Christian Historical Society )
என்ற பெயரில் எடுக்கவும்



**ஆசிரியர்**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
**கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,**
**பங்களாச் சுரண்டை-627859,**
**தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)**
**04633 290401, 91767 80001**

christianhistoricalsociety.in
tchsportal.co.in
christianhistorical@gmail.com




மன்னா செல்வகுமார்

# 200 ஆண்டுகளை கண்ட அருளூர் திருச்சபை

சார்லஸ் தியாப்பிலஸ் ஈவால்ட் ரேனியஸ் (Charles Tleop-lilus Ewald Rhenius) ஐயர் (நவம்பர் 5, 1790 - ஜீன் 5, 1838) இவர் சாதீயப் பாகுபாடுகளைப் போக்கி சமத்துவக் குடியிருப்புகளை உருவாக்கியதுடன் பெண்கள் கல்விக்கு முன்னின்று பள்ளிகளைத் தொடங்கியவர். சமூகத்திற்கு உதவும் பல சங்கங்களைத் தோற்றுவித்த ஒரு சமூக சீர்திருத்தவாதியாகவும் விளங்கின இவர் 7.7.1820 ஆம் ஆண்டு பாளையங்கோட்டைக்கு வந்து சேர்ந்த கனம் சி.டி.ஈ. இரேனியஸ் அவர்கள் 18 ஆண்டு காலங்களாக நம்முடைய ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டத்தை மையமாக பணி செய்து 371 சபைகளை உருவாக்கியவர்.

ரேனியஸ் ஐயர் வந்த சில மாதங்கள் கழிந்த அவருக்கு உதவியாக கனம் B ஷ்மிட் (SCHMID, Ludwing Bernard Ehergott 1788-1857) ஐயர் வந்தார். சுமார் ஒன்றரை வருஷங்களாக இவர்கள் ஊழியத்தில் ஆத்தும ஆதாய அறுவடை ஏதும் காணப்படவில்லை. 1822 ம் ஆண்டு மார்ச் மாதம் 10 ம் நாள் அது. அந்த நாள் முதல் பாளையங்கோட்டை, திருப்புளியங்குடி, 1823 ஆம் ஆண்டு அருளூர், அமத்தவொண்ணாக்குடி, சாத்தான்குளம், தச்சமொழி, செக்கடிவிளை, ஸ்ரீவைகுண்டம், கான்ஸாபுரம், கீழப்பாட்டம் முதலியவிடங்களில் சபைகள் உண்டாயின.

அதுமாத்திரம் அல்லாமல் 5 ஆண்டுகளிலேயே 107 பள்ளிகளை நிறுவி பிள்ளைகள் கற்கும்படியாக ஐயர் அவர்கள் செய்த காரியமும் நமக்கு தெரியாமல் இல்லை. இருந்த போதிலும் ஐயர் அவர்கள் நம்முடைய முதல் ஆலயமாக பாளை கதீட்ரல் பேராலயத்தை கட்டினார். அதே ஆண்டிலே திருப்புளியங்குடியிலேயே ஒரு ஆலத்தையும் அவர் கட்டினார்.

1824 ஆம் ஆண்டில், பாளையம்கோட்டைக்கு

தென் கீழ் நாட்டில் சாத்தன்குளத்துக்குச் சுமார் ஐந்தாறு கல் தொலைவிலிருந்த, செம்பொன்குடியிருப்பு அவ்வூரில் சிலருக்கு வாழையடி எனும் கிராமத்தில் வாழ்ந்த சில எஸ்.பி.சி.கே கிறிஸ்தவர்கள் உறவின் முறையாய் இருந்தனர். அவர்கள் மூலமாய் கிறிஸ்து நாதரைப் பற்றி கேள்விப்பட்டிருந்த செம்பொன்குடியிருப்பு என்ற கிராமத்திலிருந்து நாடார் குலமக்களில் சிலர் கிறிஸ்துவினடியாராகத் தீர்மானித்து, அவர்கள் மூலமாய் கிறிஸ்து நாதரைப் பற்றி கேள்விப்பட்டிருந்த செம்பொன்குடியிருப்பு மக்கள் இயேசு இரட்சகரைப் பற்றி நன்கு அறிய விரும்பி வாழையடியாரைக் கேட்டார்கள். அந்நாளில் எஸ்.பி.சி.கே மிஷனெரிமார்கள் ஒருவரும் நெல்லையில் இல்லாததால் அக்கிறிஸ்தவ உறவினர் பாளையங்கோட்டைக்கு சி.எம்.எஸ் மிஷனெரிமாரிடம் அவர்களை அனுப்பினார்கள்.

பாளையங்கோட்டைக்குச் சென்று, ரேனியஸ் ஐயரிடம் தங்கள் விருப்பத்தைக் கூறினர். அவர்கள் திருச்சபையில் சேருவதற்கான நோக்கத்தை திட்டமாய் விசாரித்து அதில் தகுதியற்ற நோக்கம் ஏதுமில்லை என அறிந்து மகிழ்ந்தார் ரேனியஸ். சுமார் இருபது குடும்பத்தினரைக் கொண்ட செம்பொன்குடியிருப்பில் திருச்சபையில் சேர விரும்பியவர்கள் 5 குடும்பத்தினரே. அந்த ஐந்து குடும்பத்தினர் மற்றும் அருகில் இருந்த கிராமத்திலிருந்து வந்த 3 குடும்பத்தினத்தாரும் மற்றொரு கிராமத்திலிருந்து வந்த இந்து குடும்பமும் ரோமன் கத்தோலிக்க குடும்பமுமாக மொத்தம் 9 குடும்பங்கள். அவர்கள் எண்ணிக்கை 41. ரோமன் கத்தோலிக்க சபையில் இருந்து வந்தவர்கள் ஏற்கனவே ஞானஸ்நானம் பெற்றிருந்ததால் மற்ற 39 பேரையும் ரேனியஸ் அன்றே ஆயத்தக்காரராக சேர்த்துக்கொண்டு அம்மாதம் 28ம் தேதி அவ்வூருக்கு நேரில் சென்று காரியங்களை ஒழுங்குபடுத்த விரும்புவதாக தெரிவித்து. ஐயர் மனம் மகிழ்ந்து, அவர்களைக் கிறிஸ்து மார்க்க ஆராய்ச்சிக்காரராகச் சேர்த்து, அவர்களுக்குக் கிறிஸ்தவ போதனை கொடுக்க ஒரு ஊழியனையும் அவர்களுடன் அனுப்பினார்.

**முதல் ஆயத்தக்காரர்களாக..**

அம்மக்கள் தொடக்கம் முதல் விசுவாசத்தில் ஊன்றி, உறுதியும் உண்மையுடையவர்களாய், உத்தம கிறிஸ்தவர்களாக விளங்கினார்கள். ஆகையினால், துவக்கத்திலிருந்தே, நாடார் குலத்தினரான அவர்களுக்கு, அவ்வூர் பிராமணராலும், வெள்ளாளராலும், அவர்களது ஆணைக்குட்பட்டிருந்த மறவராலும் உண்டான துன்பங்கள் விவரிக்கப்படக் கூடாதவை. அந்நிலைமையையறிந்த ரேனியஸ், 25ம் தேதி தாவீது உபதேசியாரையும் 2 செமினரி மாணவரையும் செம்பொன்குடியிருப்புக்கு அனுப்பிவிட்டு தன்னுடைய உடன் ஊழியரான உபதேசிமாரில் வெகு திறமையும் சாமர்த்தியமும், உறுதியும் ஊக்கமும் உள்ளவரான தாவீது உபதேசியாருக்கு, அவ்வூர் கிறிஸ்தவர்களுக்கு உதவி செய்யக் கட்டளையிட்டார். தாவீது தஞ்சாவூர்க்காரர்; வெள்ளாள வகுப்பினர். அவர் கிறிஸ்தவர்களின் பகைவரையும், குறிப்பாக அவர்களில் மும்முரமான பிராமணரையும், பழனியப்பபிள்ளை என்ற வெள்ளாளர் தலைவனையும் சந்தித்துக் கண்டித்தார். பிராமணரில் நல்ல மனிதரொருவர் செம்பொன்குடியிருப்புக் கிறிஸ்தவர்கள் குடியேறுவதற்கு, அவ்வூருக்கருகிலுள்ள தன்னுடைய நிலத்தைக் கொடுக்கச் சம்மதித்துத் தன் நட்பையும் அனுதாபத்தையும் காட்டிக்கொண்டார்.

தாவீது உடனே ரேனியஸ் ஐயரிடம் செய்தி கூற, ரேனியஸ் மகிழ்ந்து, அந்நிலத்தை இனமாயல்ல, விலைக்கிரயத்துக்கே வாங்கிக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்து, அதே ஆண்டு அக்டோபர் 28-ம் நாளில் அங்கு சேர்ந்தார். மேற்சொன்ன 9 குடும்பத்தாரும் அவரை வரவேற்றனர். ரேனியஸ் கிறிஸ்து மார்க்கத்தைப் பற்றி அவர்களுக்கு தெளிவாய் கூறினார். அப்போது அம்மக்கள் சுவிசேத்திற்காகத் தாங்கள் எல்லாவற்றையும் துறக்க தயாராக இருப்பதாக சொன்னார்கள். அவர்கள் அனைவரையும் ஞானஸ்நான ஆயத்தக்காரராகச் சேர்த்து மகிழ்ந்தார். (28-10-1823).

**புதுக் குடியேற்றம்**

அவ்வந்தனரும் அவரை வரவேற்றுத் தான் வாக்குக் கொடுத்தப்படியே அந்நிலத்தை ரேனியசுக்குக் கொடுத்தார். அந்நாளிலிருந்த முறைப்படி அந்நிலத்தில் ஓரிடத்தில் அவ்விருவரும் ஒரு பச்சைப் பனையோலையை நட்டு நிலவுரிமை மாற்றத்தை முடித்துக் கொண்டனர். பின், கிறிஸ்தவ மக்கள் வீடு கட்டிக் குடியேறுவதற்கு, அவர்கள் ஒவ்வொருவருக்கும் வீட்டு மனையும் அளந்து கொடுக்கப்பட்டது. ரேனியஸ் அப்புதுக் குடியேற்றத்துக்கு **'அருளூர்'** என்று பெயர் கொடுத்தார். உறுதியோலை நாட்டப்பட்ட இடத்திலேயே முதல் ஆலயமும் கட்டப்பட்டது. [இன்று அது பள்ளிக்கூடமாயிருக்கிறது].

இவ்வாறு **அருளூர்** என்ற கிறிஸ்தவ கிராமம் உருவாயிற்றென்றாலும், மறுமாதமே பழனியப்பபிள்ளை வகையறாக்கள் கிறிஸ்துவ மக்களைத் துன்புறுத்தலாயினர். அதைக் கேள்விப்பட்ட தாவீது திரும்பவும் அருளூருக்குச் சென்று, மிகுந்த பிரயாசத்துடன் கிறிஸ்தவர்களுடைய துன்பந்துடைத்துச், சில நாட்கள் அம்மக்களுடன் தங்கித், அம்மக்களுக்கு இயேசு ரட்சகரின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்.

அடுத்த சில வாரத்தில் ரேனியஸ் வேதாகம மொழிபெயர்ப்புச் சம்பந்தமாக சென்னை மாநகரத்துக்குச் சென்று, ஜூலை மாதம் வரை அங்கே தங்கிவிட்டுத் திரும்பினார். அவர் சென்னைக்குப் போகுமுன் தானியேல் என்ற ஒரு உபதேசியாரையும், அவருக்கு உதவியாக உதவியுபதேசியாராக (Assistant catechist) வேதமாணிக்கம் என்றவோர் வயோதிபரையும் நியமித்தனுப்பியிருந்தார்.

**சி எம் எஸ் முதல் இரத்த சாட்சி**

ரேனியஸ் சென்னைக்குச் சென்றுவிட்டார் என்றும், திரும்புவதற்குச் சில மாதங்களாகும் என்றும் செம்பொன்குடியிருப்பு பழனியப்பபிள்ளையும் பிற பகைஞரும் கேள்விப்பட்டனர். உடனே அவர்கள் வரிந்துகட்டிக்கொண்டு அருளூர் கிறிஸ்தவர்களைத் தாக்கி அடித்து, இம்சித்து, வீடுகளின் கூரைகளைப் பிய்த்தெறிந்து, சுவர்களை இடித்து, ஆலயத்தையும்

தரைமட்டமாக்கினார். மேலும் கிறிஸ்தவர்களின் மகசூல்களையும் சூறையாடினர்.

அருளூர் கிறிஸ்தவர்களுக்கு இவ்வாறு துன்பங்களிழைக்கப்பட்ட செய்தி, சாத்தான்குளத்துக் கெட்டினதும், இங்கும் நிபந்தனைக்காரரும் அவருடைய ஆட்களும் இங்குள்ள கிறிஸ்தவர்களைத் தாக்கி அடித்து, சபைத் தலைவரில் மூன்றுபேர் மீது பொய்க் குற்றம் சாட்டி, அவர்களைப் பிடித்துத் தூணுடன் பிணித்து, சாட்டையடி கொடுத்து இம்சித்தனர். ஏழைக் கிறிஸ்தவர்களில் சிலருடைய வீடுகள் நெருப்புக்கிரையாயின.

ஷ்மிட் ஐயர் இவ்விரண்டு சபைகளுக்கும் அடிக்கடிசென்று, மக்களுக்கு ஆறுதல் கூறிவந்தார். ரேனியஸ் சென்னையிலிருந்து திரும்பியதும், நடந்தவைகளைக் கேள்விப்பட்டு மனம் வருந்தினவராய், உடனே சாத்தன்குளத்துக்கும், அருளூருக்கும் சென்று, சகலத்தையும் நேரில் விசாரித்தறிந்தார். பின் அவர் திருநெல்வேலிக் கலெக்டராயிருந்த மன்ரோ துரையிடம் பிராது கொடுக்க, அத்துரைமகன் விசாரணை செய்து அருளூரிலும் சாத்தான்குளத்திலும் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திய பகைவரைக் குற்றவாளிகளாகக் கண்டு, தண்டனை வழங்கினார். அதுமுதல் இரு சபைகளுக்கும் சில காலம் துன்பமில்லாதிருந்தது.

ஆனால், காலங்குடி (12.12.1824), அருளூர் (13.1.1825), கலுங்குவிளை (27.11.1825), அமத்தவொண்ணாக்குடி (29.11.1825), செக்கடிவிளை (25.12.1825), பண்டாரபுரம் (25.12.1825), படுக்கப்பத்து (26.11.1825), தச்சன்மொழி (26.3.1826), புதுப்பச்சேரி (26.3.1826), குறிப்பன்குளம் (26.3.1826), சோலைக்குடியிருப்பு (6.4.1826), நெடுவிளை (7.4.1826) முதலிய பல சபைகளில் ஞானஸ்நானங்கள் நடந்தேறிவிட்டன.

1825, 1826-ம் ஆண்டுகளில் நாம் மேற்சொன்ன கிராமங்களில் மட்டுமல்லாது, திருநெல்வேலி நாட்டில் வேறு பல திசைகளிலும் அநேக கிறிஸ்தவ சபைகள் தோன்றின. அவை மொத்தம் 125. இவ்விதத் தீவிர வளர்ச்சியைக் கண்டதும், கிறிஸ்து மார்க்க விரோதிகள் கொதித்தெழுந்தனர். எத்திசையிலும் கிறிஸ்தவர்களுக்குத் துன்பம் மிகவும் கொடியதாயிருந்தது. அதிலும், சாத்தான்குளத்தில் அறுபதுபேர் ஞானஸ்நானம் பெற்றது தான் பகைவரின் உக்கிரகோபத்தைப் பற்றியெரியச் செய்த செயலாயிற்று!

இவ்விரு ஊர்களிலும் பகைவரின் உக்கிரகோபம் சபைத்தலைவர் மீதே திரும்பிற்று. அருளூரின் சபைத்தலைவர் பேதுரு என்பவர். ‘மாயாண்டி நாடார்’ என்ற பெயருடைய இவர்தாம் செம்பொன் குடியிருப்பிலிருந்து முதல் முதல் கிறிஸ்தவர்களானவர்கள். ஒரு மாயாண்டி நாடார் பேதுரு வேதமுத்து என்ற பெயருடனும், அடுத்த மாயாண்டி நாடார் ஆபிரகாம் சாந்தப்பன் என்ற பெயருடனும் தங்கள் குடும்பங்களோடு ஞானஸ்நானம் பெற்றிருந்தனர். அவர்களிருவரும் கருத்தக்கண்ணு நாடார் (ஞானஸ்நானப் பெயர் சகேயு ஞானமுத்து) என்பவருமே முதல் முதல் அருளூரில் குடியேறினவர்கள். இம்மூவரில் பேதுரு என்பவர் சற்று தனவந்தர், செல்வாக்குள்ளவர், நியாயவாதி; செம்பொன் குடியிருப்பிலும், வேறுபல ஊர்களிலும் நாடார் குல மக்களில் பலரைக் கிறிஸ்து மார்க்கத்தில் சேரச் செய்தவர். ஆகையினால் அவரே பகைவரின் தீராப்பகைக்கு ஆளானார்.

பழனியப்பபிள்ளை பேதுருவைத் தொலைத்துவிடத் தீர்மானித்து, தன் ஆட்களைத் தயார்பண்ணி, 1826-அக்டோபர் 1- ஆம் தேதி காலையில் அருளூரைத் தாக்கினர். உடனே குழப்பமுண்டாயிற்று. அக்குழப்பத்தில் பேதுருவின் தலை மீது ஒருவன் தடிகொண்டடித்தான். அவர் கீழே விழுந்ததும் மரித்தார். பழனியப்பன் செத்துப் போன அவரைக் காலாலுதைத்துத் தள்ளினார். பேதுருவின் தாயாரும் சகோதரனும் விழுந்த பேதுருவுக்கு உதவி செய்ய ஓடி வந்தனர். உடனே பகைவர் அவர்களையும், கிறிஸ்தவர்களில் வேறு பலரையும் தடிகொண்டு அடித்துக் காயப்படுத்திவிட்டுச் சென்றனர். அன்று, பேதுரு வேதமுத்து திருநெல்வேலி சி எம் எஸ் மிஷன் திருச்சபையின் முதலாம் (C.M.S) இரத்தச் சாட்சியானார்.

இந்தக் கொலையினால் பற்பல கிராமங்களில் தோன்றியிருந்த புதுக் கிறிஸ்தவ சபைகளில் பெருந்திகிலுண்டானது. பகைவர்களுக்கோ துணிவு அதிகரித்தது. அவர்கள் முன்னிலும் அதிகமாய்க் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தலாயினர். அதன் பயனாக பத்தொன்பது சபைகள் மறுதலித்துவிட்டன. சுமார் 1000 குடும்பங்களைக் கொண்டதாக வளர்ந்திருந்த திருநெல்வேலி C.M.S திருச்சபை 1827-ம் ஆண்டில் 756 குடும்பங்களை மட்டும் உடையதாய்க் குறைந்தது. சபையில் துன்பத்தீ கொளுந்து விட்டெரிந்ததெனினும், சபை மக்கள் பொறுமையாகச் சகல துன்பங்களையும் சகித்து, விசுவாசத்தில் நிலைத்து நின்று மருள விழாமல் தங்களைக் காத்துக் கொண்டனர். திருநெல்வேலியிலெங்கும் துன்பம் ஒருவாறு ஓய்ந்தவுடன் சபைகள் மறுபடியும் துளிர்த்து வளர்ந்தன. பல புதுச்சபைகள் தோன்றின.

**அருளூரின் பரிசுத்த வாட்டியின் அரிசி காணிக்கை**

தாயார் அருளாயி ஒரு ரோமானித்தப் பெண் முத்தையா பிள்ளை என்ற அவளுடைய உறவினரொருவருக்கும் அவளுக்கும் திருமணம் நடந்தது. நல்லறமாம் இல்லறத்தை நடத்தத் துவக்கிய நாளில் முத்தையா ரேனியஸ் ஐயரின் சுவிசேஷ நற்செய்தி கேட்டு சுவிசேஷ மார்க்கத்தில் சேர்ந்து, அவர் நடத்திவந்த செமினெரியில் ஒரு மாணவனாய் அந்தார் கணவன் எவ்வழியோ அவ்வழி தன் வழியென்று கொண்ட தாயார் அருளாயியும் திருச்சபையின் அங்கமானாள் முத்தையன் என்று செமினெரியில் அறியப்பட்ட முத்தையாபிள்ளை ஏற்கனவே கற்றறிந்தவரானபடியால், ரேனியஸ் ஐயர் அவரை உபதேசியார் ஊழியத்திற்கேற்ற பயிற்சி கொடுத்து வந்தார். அருளாயி என்றறியப்பட்ட தாயாரருளாயியும் பெண்கள் செமினெரியில் பயின்று வந்தாள்.

அருளூர் விரைவாக வளர்ந்தது. செம்பொன் குடியிருப்பு மக்களிற் பலரும், அருகிலிருந்த கிராமங்களில் கிறிஸ்தவர்ளாக மாறினவர்களும் புதிது புதிதாக அங்கு குடியேறினர், அதைக் கண்ட கிறிஸ்து மார்க்க விரோதிகள் எழும்பி அச்சபை

மக்களுக்கு மிகுந்த துன்பங்களைக் கொடுத்தார்கள். அவர்களின் தலைவன் பழனியப்பபிள்ளை என்றவொரு 'குட்டி மிராசுதார்.' நாளுக்கு நாள் அந்த மனிதனும் அவரது கையாட்களும் அருளூர் கிறிஸ்தவர்களுக்கு இழைத்து வந்த தீங்குகளை வர்ணிக்கவியலாது. அத்துயரநாட்களில் அம்மக்களுக்கு உபதேசியாராக இருந்த கொர்னேலியுவினாலும் அவர்களுக்கு உதவி செய்ய முடியவில்லை. ஆகையினால் ரேனியஸ் ஐயர் கொர்னேலியுவை மாற்றி விட்டு முத்தையனை அருளூர் உபதேசியராக நியமித்தார். அவர் தன் மனைவியுடனும் குழந்தை மரியமுத்துவுடனும் அருளூருக்குச் சென்று ஊழியத்தை ஒப்புக்கொண்டார்.

இள வயதினளாயினும் தாயாரருளாயி அம்மாள் அருளூர்ச் சபைக்கு ஓர் அன்னையாகவே விளங்கி வந்தாள் அவர்களுடைய துன்பங்களில் அவர்களுக்கு ஆறுதல் சொல்லுவாள்; நோய் நொடிவரின் தன்னாலான உதவிகளை முழுமனதுடன் செய்வாள். மிகவும் ஏழைகளானவர்களுக்குப் பொருளுதவியும் தருவாள். அச்சபை மக்கள் அவளை நேசித்ததில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை. தாயாரருளாயி என்ற அவளுடைய பெயரும் தாயாரம்மாள் என்று சுருக்கப்பட்டு விளங்கின தற்கொப்ப, அவள் ஒரு தாயாராகவே விளங்கினாள். முத்தையன் உபதேசியாரும் தன் மனைவியின் தாராள ஈகைகளை ஆதரித்து, நற்குணநற்செய்கைகளில் அவளை ஊக்கப்படுத்தி வந்தார்.

துவக்கம் முதலே திருநெல்வேலி திருச்சபையைத் 'சுய உதவி' பழக்குவதில் ரேனியஸ் அதிக முயற்சி எடுத்துக்கொண்டார். திருச்சபை ஊழியம் நன்கு நடைபெறுவதற்குச் சபையார் காணிக்கைகளைத் தாராளமனதுடன் கொடுப்பது, தங்கள் ஆலயப்பணிகளுக்காகக் கொடுப்பது, ஏழைகள் தர்மம், துன்புற்ற கிறிஸ்தவர்களைக் குடியேற்றி காப்பாற்ற குடியேற்ற நிலங்கள் வாங்க ஏற்படுத்தப்பட்ட தர்ம சகாயபணம், திருச்சபையின் சுவிசேஷ ஊழியத்தின் ஆதரவுக்காகச் சுவிசேஷப் பண நிதி, துண்டுத்தாள் பிரசுர சங்கம் முதலிய பலதரப்பட அமைப்புகளுக்குக் கொடுப்பது - இவற்றில் கிறிஸ்தவர்கள் நன்கு பழக்கப்பட்டிருந்தனர். இக்காலத்தில் நமது சபைகளில் அறுப்பின் பண்டிகை, சங்கப்பண்டிகையென்று ஆண்டுதோறும் பண்டிகை நாட்களை அனுசரிப்பது போல, அக்காலத்தில் தர்மசகாயப் பண்டிகை, துண்டுத்தாள் பிரசுரச்சங்கப்பண்டிகையென்று பண்டிகைகள் கொண்டாடுவதுண்டு. இப்பண்டிகைகளை சபைகள்தோறும் அல்ல, சேகரத்தலைமை ஸ்தானத்தில் தான் கொண்டாடுவர் பண்டிகை நாட்களில் கிராமச்சபை மக்கள் அனைவரும் அவ்வூரில் கூடி, விசேஷித்த ஆராதனையில் கலந்து, தங்கள் காணிக்கைகளைப் படைப்பர்.

தாயாரம்மாள் காணிக்கைகள் கொடுப்பதில் மிகுந்த உற்சாகமும் தாராள மனப்பான்மையும் கொண்டவள். பண்டிகையொன்று வருகிறதென்றால் அதற்கென்று பல மாதங்களாக ஆயத்தப்படுவாள். கோழியொன்றை அடையெடுத்துக் கோழியும் குஞ்சுகளுமாகப் படைப்பது அவளுக்கு அலாதி பிரியம். தானே முயற்சி செய்து, பொருட்களைச் சேர்த்துவைத்துப் படைப்பதில் பெருமை கொள்வாள். சேகரத் தலைமைப் ஸ்தலமாகிய சாத்தன்குளத்தில் நடைபெற்ற பண்டிகைகளுக்குப் போய்வருவதைப் போல, திருச்சபைத் தலைநகரமான பாளையங்கோட்டையில் நடைபெற்ற வைபவங்களுக்கும் போய்த் தன் காணிக்கையைப் படைத்துத் திரும்புவாள்.

பாளையங்கோட்டையில் ரேனியஸ் ஐயர் புது ஆலயமொன்று கட்டினார். அக்கட்டிடக் கட்டுமானச் செலவுக்காகக் கிராமச்சபை மக்களிடமிருந்து உதவி கேட்க ரேனியஸுக்கு விருப்பமில்லை எனினும், தாயாரம்மாள் அருளூர்ச் சபையாரை உற்சாகப்படுத்தி, அம்மக்கள் தங்களாலானதை மனமுவந்து கொடுக்கச் செய்தாள்.

ஆலயப்பிரதிஷ்டை1826ஜூன்மாதம்26-ம்தேதியென்று குறிக்கப்பட்டது. தாயாரம்மாள் தன் இரண்டாவது குழந்தையைப் பெற்று ஒரு மாத காலங்கூட ஆகவில்லையெனினும், பிரதிஷ்டை விழாவுக்குப் புறப்பட்டுவிட்டாள்! அப்பெருவிழாவிலும் கலந்து, காணிக்கை படைத்து கர்த்தரைத் துதித்தாள். அப் புதிய பரிசுத்த தேவாலயத்தில் முதல் முதலாக ஞானஸ்நானம் பெறும் பாக்கியம் தன் குழந்தைக்கே கிடைக்கும் பெரும் பேறு அவளுடைய தாயிற்று! 1826 ஜூலை 16 ம் நாள் ரேனியஸ் ஐயர் அக்குழந்தைக்கு அருளாயி என்று பெயர் சூட்டி ஞானஸ்நானம் கொடுத்தார்.

மூன்றாண்டுகள் ஓடி மறைந்தன. சாத்தன்குளத்தில் சேகரத் துண்டுத்தாள் **பிரசுர சங்க வருடாந்தரப் பண்டிகை** வருகிறது. ஓராண்டுக்கு முன்பே அப்பண்டிகை நாள் குறிக்கப்பட்டுவிட்டபடியால், தாயாரம்மாள் அதற்கென்று ஒரு புதிய முறையில் தயாரானாள்.

நாமறிந்தமட்டில் முத்தையன் உபதேசியாரின் குடும்பம் சிறியது. இரண்டே சிறு குழந்தைகளும். அவரும் மனையாளும் மட்டுமே. ஒருக்கால் அவர்களது உறவினர் யாரும் அவர்களுடனிருந்து வந்தனரோ, ஏதோ, அறியோம். ஆனால் அவருடையது 'பெரிய குடும்பமென வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

தினந்தோறும் ஆகாரம் சமைக்கும் போதெல்லாம் தாயாரம்மாள் கொஞ்சம் அரிசியை எடுத்துத் தனியாக ஒரு சாக்கில்போட்டு வைத்தாள் இப்படியே வருஷம் முழுவதும் செய்தாள். சாக்குகள் இரண்டு நிரம்பிவிட்டன பண்டிகைக்குச் சாத்தன்குளம் போகும் நாளும் வந்துவிட்டது. புறப்பட்டாள் ஒரு பெரிய கூண்டு வண்டியில். தன் மக்களுடனும் சபைப் பெண்கள் சிலருடனும், இரு சாக்கு மூடைகள் சகிதம் உபதேசியாருடன் முந்தின நாளே போய் விட்டாள்

ஆராதனை ஆரம்பித்தது. ரேனியஸ் ஐயரின் உடன் மிஷனெரியான ஷ்மிட் ஐயர் அதை நடத்தினார். காணிக்கைகள் படைக்கப்பட்டன. பல விதமான பொருட்கள், கோழிகள், ஆடுகள், தானியவகைகள், ஆராதனை முடிந்ததும், ஏலம். அதுவும் முடிந்தது, இன்னமும் ஒரு பொருளைத் தவிர, அது தாயாரம்மாளின் அரிசி மூடைகள். கொட்டி அளந்து 75 படி அரிசியென்று கண்டனர். சாத்தன்குளம் அரிசி வியாபாரியான

கிறிஸ்தவர் ஒருவர் அதை அன்றைய கடை விலைக்கு எடுத்துக்கொள்ளச் சம்மதித்து, அவ்வெழுபத்தைந்து படி அரிசிக்கு அன்றைய கிரயமான ரூ.11-ஐ ஐயர் முன் மேஜையின் மேல் வைத்தார். ஷ்மிட் ஐயருக்கு சந்தோஷம் தாங்கமுடியவில்லை. ஆஹா, ஒன்றரை ரூபாய்! எவ்வளவு பெரிய தொகை!

யார் இவ்வளவு பெரிய காணிக்கையைக் கொடுத்தது என்று விசாரித்துத் தாயாரம்மாளின் நூதன முறையைக் கேட்டறிந்த ஐயர் அவளை வெகுவாகப் பாராட்டி, ஆசீர்வதித்தார்

மறுநாள் பாளையங்கோட்டைக்கு திரும்பிச் சென்ற ஷ்மிட் ரேனியஸ் ஐயரிடம் இச்சம்பவத்தைத் தெரிவித்தார். ரேனியஸ் அகமகிழ்ந்தார். தாயாரம்மாளுக்காக கர்த்தரைத் துதித்தார், அப்பொழுதே அவர் மனதில் ஒரு திட்டமும் உதயமாயிற்று. ஆம், தாயாரம்மாளின் முயற்சியை திருநெல்வேலி சபை மக்கள் அனைவரும் அறிய வேண்டும். அறிந்து அவர்கள் அதைப் பின்பற்றவேண்டும். உடனே எழுதினார், உபதேசிமார் அனைவருக்கும். **“நமது சபைகளில் கிறிஸ்தவத் தாய்மார் அனைவரும் தினந்தோறும் சாதம் சமைக்கத் தொடங்கும்போது கொஞ்சம் அரிசியை எடுத்து தனியே வைக்கவேண்டும். அவ்வரிசியை ஞாயிறுதோறும் படைக்கவேண்டும்.“** உபதேசிமார் இக்கட்டளையை மனமகிழ்ச்சியுடன் ஏற்றுச் சபைகளில் வழக்கப்படுத்தினர் (1829)

அவ்வாண்டு முதல், அது, துவக்கத்தில் C.M.S. சபைகளிலும் பின் S.P.G சபைகளிலும் பரவி பின்னர் நாகர்கோவில் L.M.S. மதுரை அமெரிக்கன் மிஷன் சபைகளுக்குள்ளும் சென்றது காலக்கிரமத்தில் தென்னிந்திய சபைகளிலும், பின் இந்தியா முழுவதிலும் இக்காலத்தில் பர்மா, இலங்கை, பிலிப்பைன்ஸ், ஜப்பான் நாடுகளின் சபைகளிலும் பரவிவிட்டது. சென்னை போன்ற நகரங்களில் இந்துக்களுக்கும் இவ்வழக்கம் நுழைந்து விட்டது!

1829 செப்டம்பர் 11 ஷ்மிட் ஐயர், கூம்ஸ் உபதேசியார், அருளூர் முத்தையா உபதேசியார், சபையில் ஏழு பேர்களுக்கும் பரிசுத்த நற்கருணை கொடுக்கப்பட்டது. இதுவே அவ்வூரில் கொடுக்கப்பட்ட **முதல் பரிசுத்த நற்கருணை ஆராதனை** ஆகும்.

பனைமரங்களுக்கு மத்தியில் அருளூர் சபையின் பரி. காபிரியேல் ஆலயம் மிக கேம்பிரமாக காட்சியளிக்கின்றது. சபை மக்களின் வளர்ச்சிக்கு ஏற்பவும், கால ஓட்டத்தின் தேவை கருதியும் பழைய ஆலயம் புதுப்பிக்கப்பட்டு 1823 ஆம் ஆண்டு ஓலைக் கூரையாக இருந்த ஆலயம் பின்னர் படிப்படியாக 1947 ம் ஆண்டு பழைய ஆலய புகைபடம் நமக்கு கிட்டவில்லை. அதன் பின்பு 1996 ஆம் ஆண்டு சேகர குருவாக இருந்த அருள்திரு K. செல்வமணி அவர்கள் காலத்தில் ஆலய கோபுரம் கட்ட திருநெல்வேலி திருமண்டல பேராயர் Rt Rev. ஜேசன் S.தர்மராஜ் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. சபை மக்களின் உதவியினால் கட்டி முடிக்கப்பட்டு. சேகர குருவானவராக இருந்த அருள்திரு P.S சாமுவேல் செல்வராஜ் மற்றும் சபை ஊழியராக இருந்த திரு. K மங்களராஜ் அவர்கள் இருந்த காலத்தில் 2003 ஆம் ஆண்டு மே மாதம் 25 ம் நாள் நெல்லை திருமண்டல பேராயர் Rt. Rev.Dr.S. ஜெயபால் டேவிட் அவர்களால் ஆலய கோபுரம் தேவ நாம மகிமைக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதே ஆண்டில்தான் திருச்சபை வளர்ச்சிக்காக ஒருங்கிணைந்த திருமண்டலமாக இருந்த திருநெல்வேலி திருமண்டலம் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி நாசரேத் திருமண்டலங்களாக பிரிக்கப்பட்டது. அதன்பின்பு சேகர குருவாக 2011 முதல் பணி செய்த Rev.Dr.B. அகஸ்டஸ்பால் பாண்டியன் அவர்கள் காலத்தில் ஆலய விரிவாக்கம் தேவைப்பட்டது. எனவே தூத்துக்குடி – நாசரேத் பேராயர் Rt.Rev.Dr.J.A.D. ஜெபச்சந்திரன் அவர்களால் 01.08.2011 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. தென்னிந்திய திருச்சபையின் தூத்துக்குடி நாசரேத் திருமண்டலமாக உதயமான பின்பு பழனியப்பபுரம் சேகரமாக ஆக்கப்பட்டு புதிய ஆலயம் தேவ கிருபையாலும் சபை மக்களின் அயராத உழைப்பினாலும் நன்கொடைகளினாலும் 2013 ஆம் ஆண்டு பணி செய்த சபை ஊழியராக திரு. s. ஈசாக்கு, சேகர குருவாக Rev.Dr.A. தேவராஜன் ஐயரவர்கள் பணி செய்த காலத்தில் அப்போதைய பிரதம பேராயர் ஆணையாளர் அருள்திரு. Rev. D. ஜேசுசகாயம் அவர்கள் காலத்தில் நெல்லை திருமண்டல முன்னாள் பேராயர் Rt. Rev.Dr.S. ஜெயபால் டேவிட் அவர்களால் தேவ நாம மகிமைக்கென்று இப்புதிய ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.




**“இரத்த சாட்சியின் இரத்தம் திருச்சபையின் வித்து”** என்பது ஆதித்திருச்சபை தந்தையர் ஒருவரின் கூற்று, அருளூரில் பேதுரு சிந்தின இரத்தம் வீண்போகாமல் நெல்லை திருச்சபையின் வித்தாக முளைத்து செழித்து வளர்ந்தது.

திருச்சபைகளில் இருநூறு ஆண்டுகளாக பல வரலாறுகள், தேய்ந்தும், மறைந்தும் போன நிலையிலேயே இன்றைய சூழலில் திருச்சபை வளர்ச்சி என்ன? இன்றைய சமுதாய வளர்ச்சி என்ன? இப்படிப்பட்ட பல்வேறு கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதமாக சபைகளை கள ஆய்வு செய்யும் விதமாக 2023 ஆம் ஆண்டு நவம்பர் 3 ம் தேதி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் உறுப்பினர்களாக இரயில் ரவி அண்ணன் மற்றும் சகோதரர் மன்னா செல்வகுமார் மற்றும் நெல்லை திருமண்டல சாம்பவர் வடகரை சேகர குரு அருட்திரு A. ஜெபரத்தினம் அவர்களுமாக சென்றோம்.



# சென்னை வேப்பேரி
# தூய. மத்தியாஸ் ஆலய வளாக
# கல்லறைத் தோட்டம்

ஜே. பர்னபாஸ்
சேலம் வரலாற்றுச் சங்கம்

சென்னை மாநகரில் ஒரு வினோதமான கல்லறைத் தோட்டமான இந்த கல்லறைத் தோட்டத்தை அன்று ஏறத்தாழ ஒரு கால் நூற்றாண்டுக்கு முன்பு சென்று பார்த்து வியந்தது எனது மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. பெரிய கல்லறை மண்டபம், உயர்ந்த ஸ்தூபி கல்லறைகள், சவப் பெட்டி வடிவ கிரானைட் கல்லறை, பளிங்கு சிற்பம், என்று என்னை வியக்கவைத்தது இந்த ஆலய வளாகம். வளாகத்தில் உள்ள உயர்ந்த கல்லறை ஸ்தூபி கோபுரங்கள் வளாக தென்னை மரங்களுடனும், சாலையோர பெருமரங்களின் கிளைகளுடனும் உயர்ந்து நின்றது எதுவரைக்கும் இவை இப்படி நிலைத்திருக்கும் என்ற கேள்வியை எனது மனதில் எழுப்பியது. பல கல்லறைகள் ஏற்கெனவே அகற்றப்பட்டு அந்த இடங்களில் ஆலய பயன்பாட்டுக் கட்டிடங்கள் (Parsonage, community hall, space for assembley and parking etc.) எழும்பி நின்றதும் அன்று என் கண்களில் படாமல் இல்லை. பழையன கழிதல் காலத்தின் கட்டாயம் என்றால் அத்துடன் நமது அடையாளங்களும், வரலாறும் மீட்கமுடியாதபடி மறைந்துபோவதை நாம் தடுக்க முடியாது. ஒரு சில கல்லறைகளைத் தவிர மற்ற கல்லறைகளைப் பற்றி நாம் வரலாற்று நூல்களில் மட்டுமே பார்த்திடமுடியும். போனது போகட்டும் ஆனது ஆகட்டும் தப்பிப்பிழைத்து தலைக்காட்டும் அந்த நாளின் வரலாற்றின் சின்னங்களான இந்த கல்லறைகளாவது இனிமேல் காப்பாற்றப்பட வேண்டும் என்று குரல் கொடுப்போம்.

### அர்மீனிய சீமான் பீட்டர் உஸ்கான் கல்லறை :

அந்த நாட்களில் சென்னையில் (Madras) புகழ்பெற்று விளங்கிய பெருவணிகர் இவர். 1725ல் இவர் சென்னை சைதாப்பேட்டையில் அடையாறின் மேல் மர்மலாங் பாலத்தை கட்டிக்கொடுத்தவர்; இன்று அந்த பாலம் மறைமலையடிகள் பாலம் என அழைக்கப்படுகிறது. இந்த பாலத்தில் இன்றும் அவர் பதித்த அர்மீனியன் மொழி கல்வெட்டு பாதுகாக்கப்பட்டுள்ளது. புனித தோமையார் மலை மாதா கோயிலுக்குச் செல்லும் படிகட்டுப் பாதைகளை 1726 ஆம் ஆண்டு இவர் கட்டித்தந்தார். ( In 1726 placed steps from the foot to the summit of St. Thomas mount.) அவரது உடல் அடக்கமாகியிருக்கும் இந்த ஆலய வளாக மனையை அன்று அவர் வாங்கியிருந்தார். (Uscan was a Catholic and had bought the ground where he lies buried)

இந்த இடத்தில் 1740ஆம் ஆண்டு ஒரு சிற்றாலயத்தையும் அவர் கட்டியிருந்தார். இந்த சிற்றாலயத்தில் அந்த காலத்தில் சங்கை பெப்ரிசியுஸ் ஐயர் (Rev. J. P. Fabricius), சங்கை கேரிக் ஐயர் (Rev. W. F. Gerike) ஆகியோர் தமிழ், இங்லீஷ், போர்த்துகீஸ், டச்சு, ஆகிய பாஷைகளில் ஆராதனைகளை நடத்தி வந்தார்கள். 1809 ஆம் ஆண்டு சென்னை பட்டண பிரவேசம் வந்த சுவிசேஷ கவிராயர் இந்த கோவிலில்தான் தனது பெத்லகேம் குறவஞ்சியை விஸ்தரித்து பிரசங்கித்தார். இங்கே தான் சாஸ்திரியாருக்கு சிங்காரப் பல்லக்கு பரிசளித்து நற்சாட்சிப் பத்திரத்தோடு 'ஞானதீபக் கவிராயர்' என்ற பட்டமும் வழங்கப்பட்டது.

### சில குறிப்பிடத்தக்க கல்லறைகள்:

1761ல் இவ்வுலக வாழ்வை நீத்த ஜெர்மன் படைத் தளபதி பாரன் ஹேடீமாஸ் (German captain Baron Heidemauz) ஶ்ரீரங்கபட்டணம் வந்து தன்னை சந்தித்த சங்கை கோலேப் ஐயரின் வேண்டுகோளை ஏற்று 1758ல் கடலூரில் தங்கியிருந்த மிஷனெரிமார்களை பாதுகாக்க தனது படைவீரர்களுக்கு கட்டளையிட்டார்.

1776 ல் வேப்பேரியில் தனது 46ஆவது வயதில் மரித்த எலிசபெத் பெல்லிங் (Elizabeth Pelling, who died at Wepery near Ma-

dras, the 4th of October 1776, aged 46 years), 1782ஆம் ஆண்டு மார்ச் 24ஆம் நாள் மரித்து இங்கே அடக்கமாகியுள்ள டச்சுக்காரர் திரு. ஆல்பட் ஹோமெட் (Albert Homoet), 1783 ஆம் ஆண்டு மே 18ஆம் நாள் தனது 29ஆம் வயதில் மரித்து இங்கே அடக்கமான திருமதி. எலிசபெத் ஸ்டிரிங்கர் (Mrs. Elizabeth Stringer), 1787ஆம் ஆண்டு ஆகஸ்டு 16ஆம் நாள் தனது 32ஆம் வயதில் மரித்து இங்கே அடக்கமாகியுள்ள செல்வி மேரி ஜெரேமியா (Miss. Mary Jeremiah) வேப்பேரியில் உள்ள ஜெரேமியா சாலை (Jeremiah's Road) இங்கே குறிப்பிடத்தக்கது.

சில கல்லறைகள் ஆங்கிலம் அல்லாத டச்சு மொழியில் Embossed Effect ல் அதாவது மெருகூட்டப்பட்ட கிரானைட் கற்பாளங்களில் எழுத்துக்கள் மேலுயர்ந்து நிற்கும்படி அதன் இடைவெளிகள் கொத்தப்பட்டு ஒரு அழகான வடிவமைப்பில் சித்திரங்களுடன் சாசன கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

திருமதி. சூசன்னா ஃபிராங்க் அம்மையாரின் கல்லறையில் (மரணம் 1802) ஆங்கிலத்தில் உள்ள சாசன கல்வெட்டும் இதே முறையில் Embossed Effect ல் உள்ளது இங்கே குறிப்பிடத்தக்கது.

டச்சு மொழியில் எழுத்துக்களைக் கொண்ட மண்டபம் போன்ற ஒரு கல்லறை இங்கே குறிப்பிடத்தக்கது. இது சிறப்புடன் சென்னைப் பட்டணத்தில் வாழ்ந்த டச்சு வியாபாரி மார்டீனஸ் ஸ்டோப் (Mr. Martinus Stof) என்பாரின் கல்லறை.

### சங்கை ஜான் பிலிப் பெப்ரிசியுஸ் ஐயர் கல்லறை :

கிறிஸ்தவ அறிவு பிரபல்ய சங்கத்தில் பணிசெய்த இராயல் டேனிஸ் மிஷனெரியான சங்கை J. P. பெப்ரிசியுஸ் ஐயர் சென்னையை பிரெஞ்சுக்காரர்கள் பிடித்தபோது புலிகட் ஏரிபகுதிக்கு தனது அனாதை இல்ல பிள்ளைகளுடன் தஞ்சமடைந்திருந்தார். 1753ஆம் ஆண்டு பெப்ரவரி 18 ஆம் நாள் இவர் புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள புனித மேரி தேவாலயத்தில் புகழ்பெற்ற இராபர்ட் கிளைவ் மற்றும் மார்கரெட் மஸ்க்லின் ஆகியோரின் திருமணத்தை நடத்தி வைத்தது இங்கே குறிப்பிடத்தக்கது. ஜெர்மன் ஞானப்பாட்டுகளையும், பரிசுத்த வேதாகமத்தையும் மொழிபெயர்த்தவர். இவரது மொழிபெயர்ப்பு 'தங்கத் திருப்புதல்' (Golden version) என அழைக்கப்படுகிறது. வேதாகம முழுமொழிபெயர்ப்பையும் ஐயர் முழங்காலில் நின்றபடியே எழுதிமுடித்தார் என்று சொல்லப்படுகிறது. இவரது கல்லறை சாசன கல்வெட்டு காணாமல் போனது. ஆனாலும் இவரது சரீர அடக்க ஸ்தலத்தின் மீது ஒரு கற்பலகை வைக்கப்பட்டிருந்தது. ' The Rev. Mr. John Philip Fabricius, died 24th January 1791, English Missionary at Vepery, aged 81 years ' இதுவே அந்த காணாமல் போன சாசன கல்வெட்டின் வாசகம். தற்பொழுது இவரது கல்லறை தூய. மத்தியாஸ் ஆலயத்தினரால் புதியதாக அமைக்கப்பட்டுள்ளது. (Erected by the parishioners of St. Mathias Church for historical records).

கர்னாடக நவாப்பின் செயலரான கர்னல் தாமஸ் பாரட் எஸ்கோயர் (Col. Thomas Barret died 23rd June 1802 aged 47 years), கிழக்கிந்திய கம்பெனி பணிகளில் ஈடுபட்டிருந்த ஜார்ஜ் தாம்சன் எஸ்கோயர் (George Thompson Esquire of the honourable company's service, who departed this life April the 17th, 1804, aged 45 years and 5 months),

திருமதி. சேரிட்டி வாலஸ் மேரி தேக்கர் (Mrs. Charity Waless Mary Thacker, aged 40years, died 19th june 1822 ) இந்த குடும்பத்தினரின் பெயரில் வேப்பேரியில் 'தேக்கர் சாலை' (Thacker's Road) உள்ளது.

### சங்கை ஜான் ராட்லர் ஐயர் கல்லறை :

சமயப் பணிகளைத் தாண்டி இவர் ஒரு சிறந்த தாவரவியல் அறிஞர். தனது 86ஆம் வயதில் சென்னையில் காலமானார். இவர் எழுதி வெளியிட்ட 'தமிழ் ஆங்கில அகராதி ' (A Dictionary of the Tamil, English Languages) சிறப்பானது. (Rev. John Rottler, D. D., died 24th January 1836, aged 86years and 7 months) இவரது மனைவியும் (Mrs. Clara Elizabeth) இதே கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டுள்ளார்.

தமிழறிஞரும், தாவரவியல் மேதையுமான இவரது நினைவாக வேப்பேரியில் தேவாலயத்தை அடுத்த தெரு 'இராட்லர் தெரு '(Rottler's Street) என அழைக்கப்பட்டு வருகிறது.

சென்னை பட்டின பிரவேசமாக வந்த சுவிசேஷ கவிராயர் வேதநாயகம் சாஸ்திரியாரை கௌரவித்து வரிசைகள் செய்து பாராட்டிய சங்கை பெல்சோத் ஐயர் (Rev. C. W. Peazold) 1817ஆம் ஆண்டு மரித்தபோது அவரது உடலை ஆலயத்தின் அருகில் சங்கை இராட்லர் ஐயர் அடக்கம் செய்திருக்கிறார்.

வரலாற்று சிறப்பு மிக்க இந்த கல்லறைத் தோட்டம் சென்னை வரலாற்றிலும், கிறிஸ்தவ திருச்சபைகளின் வரலாற்றிலும், சான்று பகரும் ஒரு வரலாற்றுப் பெட்டகம் (Epitome of Chennai history )என்றால் அது மிகையாகாது.



# புரட்சிப்புயல் ஏமிகார்மைக்கேல்

நெடுந்தொடர் -அத்தியாயம்-19

முனைவர் ஜான்சி பால்ராஜ்,
திருநெல்வேலி

## நாவல் பதக்கம் பெறுதல்

குழந்தை மரியா கர்நாடகாவிலிருந்து வந்த மூன்றுமாத குழந்தை. செரிமானமின்றி ஒரே வயிற்றுப் போக்கு. இன்று அது, மூச்சுவிட தடுமாறியது. தனி அறையில் ஏமியும் குழந்தைக்கென்று நியமிக்கப்பட்ட செவ்வந்தி அக்காவும், நர்சு ப்ரீத்தியும் தான் ஒருவாரமாக உடனிருந்து கவனித்து வந்தனர். குழந்தைகள் அதிகளவு நோய்வாய்ப்பட்டால் அவை வளர்க்கப்படும் அறைகளில் ஏமியும் இருப்பார்.

குழந்தைகளுக்குக் கூடுதல் சிகிச்சை அளிக்க டோனாவூரிலிருந்து தெற்கே 45 மைல் தொலைவிலிருந்த நெய்யூர் மிஷன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். மாட்டு வண்டிகள் தான் அன்றைய தூரம் கடத்தலுக்கு உதவிய வாகனங்கள். குழந்தைகளை அலுங்கல் குலுங்கலை அதிகம் உணரவிடாமல் மிக மெதுவாக கொண்டு சென்று சேர்க்க ஒரு பகல் முழுவது ஆகிவிடும். குணமாகும்வரை மருத்துவமனையிலேயே தங்கியிருந்தாக வேண்டும். அதற்கென மருத்துவமனை அருகில் ஒரு வீடு வாங்கப்பட்டது. அது ஜோப்பா இல்லம் என பெயரிடப்பட்டு பராமரிக்கப்பட்டது. இதற்கு பொறுப்பாக பொன்னம்மாளை நியமித்திருந்தார் ஏமி. அவளது திடீர் மரணத்திற்குப் பிறகு டோனாவூரிலேயே ஒரு மருத்துவமனைக் கட்டியாக வேண்டும் என்ற தீர்க்கமான முடிவுக்கு வந்தார். இங்கு இப்போதுள்ள குறைந்த அளவிலான மருத்துவ செவிலியர்கள் இனி போதாது. எனவே அதற்கான தேவையை தெரிவித்து சேவை மனப்பான்மையோடு பணியாற்றும் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ உதவியாளர்களுக்கு அழைப்பு விடுத்து ஐரோப்பிய நண்பர்களுக்கு விரிவான கடிதங்களை எழுதியனுப்பினார்.

இப்போது 50 க்கும் மேல் உள்ள குழந்தைகளுக்கு தாயான ஏமியின் விழிகளுக்கு போதிய தூக்கம் என்பது இல்லாத ஒன்றாகிக் கொண்டிருந்தது. எந்தக் குழந்தை நோயுற்றாலும் ஏமிக்கு மரண பயம் தான். செவிலியரும் பொறுப்பாளரும் அசதியில் உறங்கினாலும் ஏமியின் கை, தொட்டிலை விரித்து குழந்தையைப் பார்த்துக் கொண்டிருக்கும். அதுவும் மரணப்பிடியிலிருக்கும் குழந்தையென்றால் ஏமியன் நெஞ்சோடும் தோளோடும் ஒட்டியே தானிருக்கும்.

மூன்று நாட்களுக்குப் பிறகு மரியா சற்று உடல்நிலை தேரியிருந்தாள். கொஞ்சம் பால் குடிக்கிறாள், சிரித்து விளையாடுகிறாள். ஏமியும் முகம்மலர்ந்து சிரிக்க ஆரம்பித்தார். ஓரடி உயர பலகையில் அமர்ந்து காலை நீட்டி சேலையை முட்டுவரை இழுத்து சுருட்டி வைத்து அந்தக் குழந்தையை குளிப்பாட்டினார். மரியா வெதுவெதுப்பான தண்ணீர் படவும்



பிஞ்சு கைகளை விரித்து கால்களை உதறி கன்னங்களில் குழி விழ சிரித்தாள். ஏமியும் குழந்தையைப் போல சிரித்து அதனோடு விளையாடி மகிழ்ந்தார். இருவரின் விளையாட்டும் தொடர, அம்மா... உங்களுக்கு கலெக்டர் ஆபிசிலிருந்து கடிதம் வந்திருக்கு.. . . என்று அவசர அவசரமாக அஞ்சலை ஏமியின் முகத்துக்கு நேராக நீட்டினாள் நர்சு ப்ரீத்தி. ஆனால் எந்தவித சலனமும் இல்லாமல் குழந்தையைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தார் ஏமி. சரி, பிரித்து படி என்றார், தன் கண்களை குழந்தை மரியாளை விட்டு அகற்றாமலே. விழிகள் படபடக்க வாசித்தபடியே.. அய்.. ஏமி, கடவுள் உங்கள் சேவைக்கு பரிசளிக்கப் போகிறார். அதுவும் *கைசர்-இ-ஹிந்த்* என்ற ப்ரீத்தி மகிழ்ச்சியில் குதித்தாள்.

அன்றைய இந்தியாவில் பொது சேவைக்கான கைசர்-இ-ஹிந்த் என்ற விருது கி. பி 1900 ல் 1947 க்கும் இடையில் ஆங்கில ஆட்சியாளர்களால் இனம், தொழில், அந்தஸ்து, பாலின வேறுபாடு என்று பாராமல் வழங்கப்பட்ட மிக உயர்ந்த பதக்கம் அது. ஆனால் ஏமியிடம் பெரிய மகிழ்ச்சியோ அதிர்ச்சியோயில்லை. சரி, சரிம்மா.. . அது இருக்கட்டும் அந்த வெள்ளை டவலை எடு துடைக்கணும் மரியாள் குளித்தாகிவிட்டது என்றார்.

ப்ரீத்தி சற்றும் தன் மகிழ்ச்சியை குறைக்காமல்.. . ஏமி, உன்னை சென்னை கலெக்டர் பென்ட்லாண்ட் பதக்கம் தர தேர்வு செய்துள்ளார் அடுத்த மாதம் என்றாள்.. .

ஏமியின் தோள்களை அணைத்துக் கொண்டு. எந்தப் பதிலும் இல்லை ஏமியிடம். மரியா இப்போது புதிய ஆடையில் அழகாக சிரித்தாள். அவளுக்கு வழக்கமாக கொடுக்கும் கை மருந்துகளை கொடுக்க தயாரானார் ஏமி. ப்ரீத்தி இப்போது சற்று கவலைப்படுவது தெரிந்தது ஏமிக்கு. ப்ரீத்தி, நீ போய் அந்த கடிதத்தை வைத்துவிட்டு மரியாளுக்கு வேண்டிய உணவுப் பொருட்களை எடுத்து வா என்றார் ஏமி. சற்று நேரத்தில் இச்செய்தி எல்லோருக்கும் பரவியது. பதக்கத்தைப் பற்றின அறிதல் இல்லாதவர்களிடம் எந்த எதிர்வினையும் இல்லை. ஆனால் ஐரோப்பிய தோழியர்கள் அதன் மதிப்பு அறிந்து மகிழ்ச்சி மழையில் அதைப்பற்றியே பேசிக் கொண்டிருந்தனர்.

ப்ரீத்தி பதக்க அறிவிப்போடு ஏமியின் மௌனத்தையும் சேர்த்தே விவரித்திருந்தாள். எனவே யாரும் ஏமியிடம் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிக்க செல்லவில்லை. ஆங்கில அரசு நினைத்தால் வெளிப்படையாகப் பெண்குழந்தைகள் வதைப்பு தடைச்சட்டத்தை இயற்றி நடைமுறைப் படுத்தலாமே. எத்தனைமுறை கவன ஈர்ப்பிற்காக நான் கடிதங்கள் எழுதி அனுப்பியிருக்கிறேன். அவர்களுக்கு இந்தியாவில் அரசாட்சியை தக்க வைக்க வேண்டும் என்ற ஒரே நோக்கம் தான். பிறகென்ன, என் கடிதங்களெல்லாம் இந்தப் பதக்கத்தை எனக்குத் தருமளவிற்குதான் செல்லுபடியாகியிருக்கிறது. இந்த அனுதாபப் பரிசு எனக்குத் தேவையில்லை. பிள்ளையும் தூங்கவேண்டும் அதைக் கிள்ளியும் விட்டு வேடிக்கையும் பார்ப்பேன் என்ற மூர்க்கத்தனம் கேவலமானது. அத்தோடு ஏன் இரகசியமாக இந்தப் பதக்கப் பரிசு எனக்கு? நான் மட்டும் இதை செய்து சாதிக்கிறேனா? ஒட்டிய வயிற்றோடு இதோ.. தெருத் தெருவாக அலைந்து இந்தப் பிஞ்சுக் குழந்தையை கொண்டு வந்தாளே இந்த தேவாய்க்கு கொடுக்க வேண்டாமா? சமூக விரோதிகளாகப் பார்க்கப்பட்டு அவமானபடுத்தப்படும் என் உடன் பிறப்புகளான பொன்னம்மாள்.., செல்லம்மாள்.. அருளாயி.. . தேவாயி.. நட்சத்திரம்.. . இன்னும் உங்களைப் போன்றோர்.. . ??

அப்பாவி பெண்களை ஈவு இரக்கமின்றி சீரழித்துக்கொண்டிருக்கும் இந்தத் தவறான பொட்டுக்கட்டும் முறையை எதிர்த்து சட்டம் இயற்றட்டும் இந்த அரசு; ஒவ்வொரு நாளும் உணவும் உறக்கமும் இன்றி இயங்கி கொண்டிருக்கும் என் தோழியரையும் கூப்பிட்டு பகீரங்கமாக இந்தச் சமூகத்திற்கு தெரியும்படி கௌரவிக்கட்டும். அதன் பிறகு நான் இந்தப் பதக்கத்தை வாங்குகிறேன். இல்லாவிட்டால் எனக்கு இது தேவையில்லை... நிராகரிக்கிறேன் என்ற ஏமி, பரிபூரணத்தின் மடியில் அழுது கொண்டிருந்த குழந்தையை நோக்கி நடந்து கொண்டிருந்தார்.

ஏமி, நீ சொல்வது சரிதான். என்றாலும் பரிசைப் பெற மறுப்பது அரசை அவமதிப்பதாகி விடும். அத்தோடு இன்னும் தொடர்ந்து இந்தப் புனிதத் தொண்டை நீங்கள் செய்வதற்கு கூடுதல் தடையாகிவிடக் கூடாதல்லவா. அதுமட்டுமல்ல மிஸ் ஏமி, இந்தப் பதக்கம் பற்றின தகவல் முழு இந்தியாவின் பற்பல சமூகச் சேவகர்கள் மற்றும் உன்னை இதுவரை தெரிந்திராத அரசியல் பெரும்புள்ளிகள் போன்றோரின் கவனத்தையும் கண்டிப்பாக ஈர்க்கும். இப்படியொரு பணி நடந்து கொண்டிருக்கிறது என்பதற்கான அறிமுகமாகவும் தேவதாசிமுறை எதிர்க்கப்படுவதை, இந்த அரசு ஆதரிக்கிறது என்பதற்குமான அத்தாட்சியாகவும் இது அமையும். எனவே எப்படி எடுத்துக் கொண்டாலும் இந்திய வரலாற்றில் தேவதாசிமுறை ஒழிப்பின் முதல் பெண்குரலாக உனது பெயர் என்றும் நிலைத்திருக்கும். கடவுளால் இது உனக்கு கையளிக்கப்பட்டிருக்கிறது என்பதை நீ மறுக்க மாட்டாய் என்று நம்புகிறேன் என்றார் ஏமியின் நல் ஆலோசகரான சிவசுப்பிரமணியன். இவர் ஓய்வுபெற்ற நீதிபதி. எதிர்பாராத விதமாக கர்நாடக மாநிலத்திலிருந்து காப்பகத்தை நேரில் பார்த்துச் செல்ல வந்திருந்தார். இவர் அவ்வப்போது ஏற்படும் சிக்கல்களுக்கு ஏமிக்கு கடிதங்கள் மூலம் சட்ட ஆலோசனைகள் வழங்குபவர். இவரது தீர்க்கமான சமூகப் பார்வையின் மீது ஏமிக்கு எப்போதும் உடன்பாடும் நன்மதிப்பும் உண்டு.

அந்தக் கடிதம் வந்து நான்கு நாட்களாகியிருந்தது. அவரது ஆலோசனைகளுக்குப் பிறகு முதல்முறையாக எடுத்து வாசித்துப் பார்த்தார் ஏமி. சற்று நேரத்தில் ப்ரீத்தி ஒரு பேனாவையும் அரசுக்கு ஒப்புதல் அனுப்பும் படிவத்தையும் கொண்டுவந்து. . . இந்தா ஏமி.. . என்ற அவள் பார்வையில் எண்ணில்லா ஆனந்தங்கள் மௌனித்திருந்தன.

ஏமி ஏறிட்டுப் பார்த்தார் புன்முறுவலோடு.. . . !!

**தொடரும்.**

# பழனி நகர் திருச்சபை வரலாறு

**Rev. G. P. Raja.** M.A.,M.S.W., B.D.,
CSI. Palani Town Pastorate.




### Rev. John Jay Lawrence and Rev. Dr. F. D. War

1838 செப்டம்பரில் மதுரை - அமெரிக்கன் மிஷன் மூலம் Rev. ஜான் J. லாரன்ஸ், Rev. வார்டு அவர்களால் பழனி பகுதியில் நற்செய்தி அறிவிக்க புறப்பட்டார்கள். திண்டுக்கல் பகுதியில் தங்கி நடந்து, மாட்டுவண்டியில் சென்று நற்செய்தி பணி செய்தார்கள். தெரு பிரசங்கம், கைப்பிரதி ஊழியம், வேதாகமம் மற்றும் கிறிஸ்தவ நூல்களை கொடுத்து நற்செய்தி அறிவிக்கப்பட்டது. 1838 முதல் 1845 வரை செய்த திருப்பணியின் மூலம் சிறிய ஆலயம் தொடங்கப்பட்டது.

**1845 ஆம் ஆண்டு சிறிய சபையை ஆரம்பமானது.**

### Rev. John Jay Lawrence 1845 – 1846


இவர் அமெரிக்காவில் 12.07.1807 அன்று பிறந்தார். 1829 ல் கல்லூரியையும், 1834 ல் இறையியலை முடித்து 16.05.1835 அன்று யாழ்ப்பாணத்தில் மிஷனெரி பணியில் இணைந்தார். 18.10.1835 அன்று மதுரை - அமெரிக்கன் மிஷனுக்கு மாற்றப்பட்டார். 05.07.1836-ல் திண்டுக்கலில் நற்செய்தியை அறிவித்தார். 1838 செப்டம்பர் முதல் பழனியில் Rev. வார்டு உடன் இணைந்து நற்செய்தி பணியை நடந்தும், மாட்டுவண்டியிலும் சென்று நற்செய்தி பணியாற்றினார்கள். 1845 ல் பழனியில் 6 நபர்கள் கொண்ட சிறிய சபை உருவாக்கினார். 20.12.1846 ல் நற்செய்தி பணியின் ஓட்டத்தை முடித்து கர்த்தருக்குள் 39 வது வயதில் நித்திரையடைந்தார். இவருடைய கல்லறை தரங்கம்பாடியில் உள்ளது.

### Rev. Edward Webb 1846 – 1857


இவர் 15.12.1819 ல் இங்கிலாந்தில் பிறந்தார். ஆஸ்திரேலியா, அமெரிக்காவில் பொதுக்கல்வி, இறையியல் கல்வியை முடித்து 1845ல் அருட்பொழிவு பெற்று மதுரை அமெரிக்கன் மிஷனில் இணைந்தார். இவர் வேதநாயகம் சாஸ்திரியிடம் தமிழ் வழியில் கீர்த்தனைகள் பயிற்சி பெற்று தென் இசையில் கீர்த்தனைகளை அறிமுகம் செய்து 1853ல் கீர்த்தனை நூல் வெளியிட்டார். 1846 முதல் 1857 வரை பழனியில் சுற்றிதிரிந்து நற்செய்தி பணியை செய்தார். Rev. வெப் மற்றும் Rev. சாண்ட்லர் 9. 10. 1857ல் ஒரு இடத்தை வாங்கினார். இவருடைய பெயரில் இன்றும் மதுரை, வடக்கு வாசலில் நினைவு ஆலயம் உள்ளது.

### Rev. John Rendal 1846 – 1879

இவர் 29. 04. 1846 அன்று மதுரை-அமெரிக்கன் மிஷனில் 39 வது நபராக ரெண்டல் அவருடைய மனைவி ஜேன்னும் இணைந்தார்கள். இவர் இணைந்த காலங்களில் பல மிஷனரிகள் காலரா நோயினால் இறந்தார்கள். சுமார் 5







மிஷனரிகள் நற்செய்தி பணியை செய்து வந்தார்கள். பழனி பகுதியில் சுற்றி திரிந்து நற்செய்தி பணியை செய்தார். நிர்வாகம், கட்டிடம் கட்டுவது, தகவல் நூல் எழுதியது, திட்டமிடுவது, மற்றும் கடின உழைப்பாளியாக திகழ்ந்தார். இவருடைய பெயரில் மதுரையில் ரெண்டல் தெரு உள்ளது மற்றும் திண்டுக்கல் அருகில் "ரெண்டல் பாறை" என்ற ஊர் உள்ளது. இவர் சுகவீனத்தினால் அமெரிக்கா புறப்பட்டார். கப்பல் பயணத்தில் இவருடைய உயிர் பிரிந்தது. இவருடைய உடலை கடலில் விட்டுச்சென்றார்கள். ரெண்டல் நினைவாக மதுரையில் கல்லறை உள்ளது. மதுரையின் மிஷன் மருத்துவ கல்லூரி முன் செல்லும் சாலைக்கு பெயர் ரெண்டல் சாலை பெயர் உள்ளது.

### Rev. G. T. Washbarn– 1857 – 1862

இவர் 1860 ல் மதுரை-அமெரிக்கன் மிஷனில் இணைந்தார். திரேசி ஊழிய பொறுப்பை பெற்று திறன்பட செயல்பட்டார். மிகவும் ஒழுக்கத்தில் கண்டிப்பானவர். தமிழ் மொழியிலும், இலக்கியத்திலும் மிகவும் பற்றுதலுடையவரானார். கல்வித்துறையில் சிறந்து விளங்கினார். இவருடைய பெயரில் பசுமலையில் மண்டபமும், அமெரிக்கன் கல்லூரியிலும் விடுதியும் இன்று வரை உள்ளது. பழனியில் அவ்வப்போது மிஷனரி பணியை செய்து வந்தார்.

## திண்டுக்கல்லிருந்து பழனி திருச்சபை தனி பணித்தளமாக அங்கீகாரம் 1862

### Rev. C. J. White 1862 – 1868

Rev. வெப் மற்றும் Rev. சாண்ட்லர் பழனியில் வாங்கிய இடத்தில் Rev. ஒயிட் 1857ல் பங்களா கட்ட பொறுப்பு கொடுக்கப்பட்டது. பழனியில் மட்டுமல்லாமல் வத்தலக்குண்டு, மேலூர், மானாமதுரை, பசுமலை மற்றும் அருப்புக்கோட்டையில் கட்டுமான பணியை செய்தார். பழனியில் பங்களாவை சிறப்பாக கட்டி Rev. ஒயிட் 1863 ல் குடியேறினார். தற்போது இந்த இடத்தில் நகராட்சி மேல்நிலைப்பள்ளி உள்ளது. இக்கட்டிடத்தில் தலைமை ஆசிரியர் அறை, அலுவலகம், ஆவணக்காப்பறை, ஆசிரியர்கள் அறை, அறிவியல் ஆய்வகம் ஆகியவை செயல்பட்டு வருகிறது.

### Rev. J. James Harrick 1864

1814ல் பிறந்து சமயப்பரப்பளராக 1846ல் அமெரிக்க மதுரைமிஷனில்இணைந்தார். திருமங்கலம்நகரகுருவானவராக பணியாற்றினார். 39 வருட இறைப்பணியின் பயணத்தில் ஒருமுறை தன்னுடைய தாய்நாட்டுக்கு சென்று வந்தார். நேரம் கிடைக்கும் போதெல்லாம் திண்டுக்கல், பழனி, பெரியகுளம் பகுதியில் நற்செய்தி பரப்பினார். மிகவும் அன்புடையவர், நோய்பட்டுள்ள மக்களை நன்கு கவனிக்கக்கூடியவர், எந்த செயலையும் திறன்பட செய்பவர், தமிழ் மீது ஆர்வமுடையவர், தன்னுடன் இருக்கும் மக்களுக்கு நன்மை செய்யக்கூடியவர். 30. 11. 1891 அன்று தன்னுடைய 77வது வயதில் மரித்தார்.

### Mr. D. Vethamuthu (Ubathesiyar) 1862 – 1885

### Rev. John Rendal 1870

## புதிய ஆலயம் கட்டப்படுதல் 1873

### Rev. D. Vethamuthu (Indian) – 1873 – 1885

இவர் பழனியில் 1873 ஆண்டு கட்டப்பட்ட புதிய ஆலயத்தில் முதல் இந்திய குருவானவராக நியமிக்கப்பட்டார். இவர் Rev. லாரன்ஸ், Rev. ஒய்ட், Rev. சாண்டலர், Rev. வெப் போன்ற வெளிநாட்டு மிஷனரிடம் நற்செய்திபணியும், மிஷனரி பணியும் செய்தார். இவர் பணியை பாராட்டி இவருக்கு குருத்துவ பட்டம் கொடுக்கப்பட்டது. பழனி திருச்சபையை 1876ல் விரிவாக்கம் செய்தார். 1877- 1878 ல் வந்த பழனியில் பஞ்சம் ஏற்பட்டது, இதற்கு பொறுப்பாயிருந்து மக்களை மீட்டு எடுத்தார். மிஷனெரியின் நிதி காரியங்களை செய்ய நியமிக்கப்பட்டார். 1855 ஜனவரியில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அவருடைய மனைவி ரெபேக்காளம்மாள் 2. 10. 1880 ல் கர்த்தருக்குள் இளைப்பாறுதலை பெற்றுக்கொண்டார். இரண்டு பேருடைய கல்லறை பழனி நகர் கல்லறைத்தோட்டத்தில் இன்றும் நினைவாக உள்ளது.

### Rev. John Eddy Chandler 1876 – 1883

இவர் 1818ல் பிறந்தார். அமெரிக்காவிலிருந்து செப்டம்பர் 1847ஆம் ஆண்டு மதுரை-அமெரிக்கன் மிஷனில் இணைந்தார். 1876 முதல் 1883 வரை பழனி நகர் மற்றும் பழனியை சுற்றியுள்ள கிராமங்களிலும், பெரியகுளம், வத்தலக்குண்டு பகுதியிலும் நற்செய்தி பணி, கல்வி பணிக்கு அதிகமாக உழைத்தவர், ஆன்மீக பணி செய்தார். இவர் ஒவ்வொரு முகத்தையும் பெயரையும் மறவாது இருப்பவர் என்ற பெயர்

பெற்றவர். இவர் தெரு பிரசங்கம், சமுதாயச் சீர்திருத்தப்பணியில் ஆழ்ந்த விருப்பம் உள்ளவர். கடமை உணர்வுடையவர், தற்சார்புடையவர், விடாமுயற்சியுடையவர், சிக்கனமுள்ளவராக திகழ்ந்தார். இவருடைய பெயரில் வத்தலக்குண்டு அருகில் சாண்ட்லர்புரம் என்று நினைவாக இன்றும் உள்ளது. 10. 01. 1894 ல் தன்னுடைய 76வது வயதில் மதுரையில் மரித்தார்.

**Rev. E. Chestler. M. D – 1874 – 1883**

திண்டுக்கல்லில் உடல் சுகத்திற்காகவும், ஆத்தும தாகத்திற்காகவும் 1859 முதல் 26. 3. 1902 வரை அவரது 74 வயது வரை இறைப்பணி செய்தார். இவருடைய முதல் மனைவின் பெயரில் சோபியா காம்பவுண்டு, பள்ளி இன்று வரை உள்ளது. 1874 முதல் 1883 வரை பழனியிலும், அதன் சுற்றியுள்ள கிராமங்களில் இறைப்பணி செய்தார். இவர் குழந்தைகள் மீது மிகவும் அன்புடையவர். கொடைக்கானலுக்கு நடந்தே செல்லுவர்.

**Rev. A. Barnns – 1881**

**Rev. J. Coltor – 1881**

**Rev. H. J. Hasan – 1885–1886**

**Rev. Athisaya David (Indian) – 1886 – 1899**

**Rev. Tracy 1893**


**Rev. W. P. Elwood (Missionary)– 1888 – 1919**

பழனி நகர் திருச்சபையிலும், அதன் சுற்றியுள்ள கிராம பகுதியிலும் குதிரை வண்டியில் வந்து கல்வி பணியும், ஆலயம் கட்டுமான பணியும், ஆன்மீக பணியும் மற்றும் நற்செய்தி பணியும் சிறப்பாக செய்து அநேக மக்களை உயர்வான நிலைமைக்கு கொண்டுவந்தவர். இவரை துரை என்று மக்களால் அழைக்கப்பட்டார். இவருடைய பெயரில் ஒரு பங்களா கட்டப்பட்டது. ஆனால் அது இன்று விற்பனை செய்யப்பட்டு வெறு ஒருவரிடம் உள்ளது. 1915 ஆம் ஆண்டு அருப்புக்கோட்டை ஆலயத்தை கட்டுவதற்கு நல்ல ஆலோசனையும், கட்டுமான பணிக்கும் உதவியவர். பல போர்டிங் பள்ளியில் எல்வுட் தம்பிகளும், ஜெப்ரி தம்பதிகளும் ஏழை பிள்ளைகளுக்கு கல்வியை புகட்டினார்கள். 1918 ல் பழைய கட்டிடங்களை அகற்றி புதிய வசதிகளுடன் புதிய கட்டிடங்களை கட்ட பொறுப்பை பெற்றார். இதைப்போல் பழனியில் எல்வுட் பெயரில் தொடக்கப்பள்ளி ஆரம்பிக்கபட்டது. கரிக்காரன் புதூர் ஆலயம் இவர் கட்டியது.

**Rev. Savaryappan Simon (Indian Third) – 1902 – 1907**

இவர் மதுரை வடக்கு வாசலில் அமைந்திருக்கும் வெப் நினைவு ஆலயத்தில் 1891 முதல் 1901 வரை முதல் குருவானவராக பணியாற்றினார். இவர் பல கீர்த்தனைப் பாடல்களை இயற்றி பாடியுள்ளார். இவர் இயற்றிய பாடலில் இன்றும் பாடக்கூடிய அர்த்தமுள்ள பாடல் "என்னை ஜீவ பலியாய் ஒப்புவித்தேன்". மதுரை, வடக்கு வாசலிருந்து பழனி திருச்சபையில் 1902 முதல் 1907 வரை குருத்துவப்பணி செய்தார். அருள்திரு. வெப் அவர்களுடன் நல்ல தொடர்பில் இருந்ததினால் பழனியிலும் வெப்க்குபிறகு பணியாற்ற அழைப்பைப் பெற்றார்.

**Rev. F. E. Jeffery –1909 – 1911**



**Rev. J. James Herrick – 1911 – 1916**

**Rev. Samuel Francis (Indian Forth Presbyter) 1911**


**Rev. A. A. Martin – 1917 – 1918**

**Rev. G. Joseph – 1918**

**Rev. E. P. Holtan–1918**


**Rev. R. A. Soundiraraj (Indian Presbyter) – 1918 – 1924**

**Rev. T. S. Charles (Indian Presbyter) – 1924 – 1933**



**Rev. L. Ponnusamy (Indian Presbyter) – 1933 – 1935**

கவிஞர். எல். பொன்னுச்சாமி ஐயர் அவர்கள் உத்தமபாளையத்தில் 12. 10. 1896 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் பாக்கியம்மாளை திருமணம் செய்து 6 பிள்ளைகளை பெற்றார். ஆரம்பகாலங்களில் வத்தலக்குண்டு சி. எஸ். ஐ. போர்டிங் பள்ளியில் தலைமை ஆசிரியராக பணி செய்தார். இவர் இறையியல் முடித்து 26. 02. 1932 ஆம் ஆண்டு குருபட்டம் பெற்று இரண்டு ஆண்டுகள் (1933-1935) பழனி திருச்சபையில் குருத்துவப்பணி செய்தார். தென்னிந்திய திருச்சபையில் பாடுகின்ற பிரபலமான பாடல் "எங்கும் புகழ் இயேசு ராஜனுக்கே' இவர் எழுதிய கீர்த்தனை பாடல்கள்: 88, 276, 352, 396, 397 கீர்த்தனையில் அடங்கியுள்ளது. இவர் 18. 08. 1965 ஆம் ஆண்டு கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். இவருடைய சரீரத்தை வத்தலக்குண்டு சி. எஸ். ஐ கல்லறைத்தோட்டத்தில் நல் அடக்கம் செய்யப்பட்டது.




**Rev. R. A. Dudley – 1935–1936**




**Rev. David Narasingam (Indian) – 1936 – 1937**

இவர் இந்து வைராக்கியமுள்ள குடும்பத்தில் பிறந்து, மதுரை-பசுமலை பள்ளியில் கல்வி பயின்றார். இப்பள்ளியில் இயேசுவை சொந்த இரட்சகராகஏற்றுநரசிங்கம் என்ற பெயருடன் டேவிட் என்று இணைத்துக்கொண்டு திருமுழுக்கு பெற்றார். பெங்களூரில் இறையியல் கற்று 1934ல் குருவாக அபிஷேகம் பெற்றார். இவர் பழனியில் 1935-1937 மற்றும் 1954-1958 ஆகிய ஆண்டுகளில் குருத்துவப்பணி செய்தார். இவர் சிறந்த அருளுரையாளர், அறிஞர், தமிழ் இலக்கிய அறிவு மற்றும்நல்ல நினைவாற்றல் கொண்டவர். 26. 12. 1968 ல் கர்த்தருக்குள் மகிமையில் பிரவேசித்தார்.



**Rev. D. A. Santhiyagu (Indian Presbyter) – 1937 – 1940**

**Rev. N. P. Daniel (Indian Presbyter) – 1941 – 1943**



**Rev. J. Samuel Gurupatham (Indian) – 1943 – 1946**

இவர் 1891ஆம் ஆண்டு பழனியில் பிறந்தார். மதுரை, பசுமலையில் பொதுக்கல்வியும், அதை தொடர்ந்து வேதாகம இறையியலை கற்று ஆசிரியர் பணியும் செய்தார். சில காலம் பல இடங்களில் குருத்துவப்பணி செய்தார். பிறந்த திருச்சபையிலே குருத்துவப்பணி 1943 முதல் 1946 சி. எஸ். ஐ உருவாகிறதற்கு முன்பும் சி. எஸ். ஐ உருவான பிறகு 1947 முதல் 1950வரை மொத்தம் 6 ஆண்டுகள் பணி செய்தார். இவர் அநேக பாடல்களை இயற்றி பாடியவர் என்பது குறிப்பிடத்தக்கது. நிறைவாக திண்டுக்கல்லில் குருத்துவப்பணி செய்து 16. 11. 1964ல் கர்த்தரின் இராஜ்ஜியத்தில் இணைந்தார்.

## தென்னிந்திய திருச்சபை உருவான பிறகு – 1947

**Rev. J. Samuel Gurupatham –1947 – 1950**

**Rev. J. D. Jeevamani 1950 – 1955**

**Rev. P. S. Arthur Lawley – 1955–1957**

**Rev. David Narasingam – 1957–1958**

**Rev. Muthusamy – 1958 –1962**

**Rev. D. J. Gabriel Durairaj – 1962 – 1964**

இவர் மதுரை, வடக்கு வாசலில் 1953 முதல் 1959 வரை குருத்துவப்பணி செய்து, பழனியில் 1962 - 1964 வரை குருத்துவப்பணி செய்தார். திருமண்டில வாலிபர் சங்கத்தை ஏற்படுத்தியவர். வலைசை ஜோன் ஆசீர்வாதம் நினைவு ஆலயம் கட்டியவர், பூந்தோட்ட வாலிபர் சங்கம், பசுமலை வாலிபர் சங்கம் அனைத்தையும் திருமண்டிலத்துடன் இணைத்தார். பழனி திருச்சபையில் வாலிபர்கள் மத்தியில் ஒரு எழுப்புதல் பெறுவதற்கு கடினமாக உழைத்தார். பழனி திருச்சபையிலிருக்கும் வாலிபர்களை எழுப்புதலுக்குள் கொண்டு வந்தார்.

**Rev. J. Royappah – 1964 – 1968**

**Rev. S. C. Packianathan – 1968 – 1969**

இவர் இராமநாதபுரம் பகுதியில் ஆதிகால குருக்களில் சிறந்து விளங்கினார் மற்றும் கிழக்கு இராமநாதபுரம் பகுதியான கீரனூர், ஏந்தல் போன்ற சபைகளை உருவாக்கினார். ஒரு ஆண்டு மட்டும் பழனி திருச்சபையில் இறைப்பணி செய்தாலும், குருத்துவப்பணியில் இவருடைய பெயரை என்றும் மறக்கமுடியாத ஊழியராக திகழ்ந்தார்.

**Rev. P. Balavendran – 1969 – 1971**

**Rev. P. S. Arthur Lawley 1971 – 1973**

தெய்வ திருப்பணிக்கென்று 1939ல் அருள்பெருந்திரு. நீல் பேராயரால் (திருநெல்வேலி) அபிஷேகம் செய்யப்பட்டார். திருமறையூரில் நான்கு ஆண்டுகள் பணி செய்து 1944ல் குருபட்டம் பெற்றார். அதன்பிறகு மதுரை பேராயத்தில் கீழக்கரை, வீரம்பல், பழனி, மதுரை கிறிஸ்துநாதர் ஆலயத்தில் பணி செய்தார். வீடுகள் சந்திப்பது, நோயாளிகளை தேற்றுவது, சபை ஒற்றுமைக்காக பெரிதும் பாடுப்பட்டார். ஆகவே, பழனி திருச்சபையில் இரண்டு முறை திருப்பணி செய்துள்ளார்.

**Rev. Stanley Thambiraj – 1973 – 1974**

**Rev. L. V. James –1974 – 1979**

இவர் கிராமங்களுக்கு சைக்கிளில் சென்று அனைத்து கிராம சபையை நடத்தி வந்தார். பழகுவதில் சிறந்தவர். சிறப்பாகவும், அமைதியுடனும் ஐந்து ஆண்டுகள் திருச்சபை பணியை செய்தார். பழனி திருச்சபையின் இறைப்பணிக்கு பிறகு திண்டுக்கல் கிழக்கு குருசேகரத்திற்கு மாற்றம் பெற்றார்.

**Rev. A. Richar – 1979 – 1988**

இவர் அதிக ஆண்டு பழனி நகரில் இறைப்பணி செய்தார். பழகுவதில் இனிமையானவர், எல்லாரிடமும் சமமாக பழகக்கூடியவர். 1986ல் மணிக்கூண்டு மற்றும் சுற்றுச்சுவர்

கட்டப்பட்டு பேராயரால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இரண்டு பக்கமும் பெரிய கதவு போடப்பட்டது. கல்லறைத்தோட்டத்தில் சுற்றுச்சுவர் கட்டினார். கிராம சபைகளில் பல முன்னேற்றங்களை கொண்டு வந்தார். பசுபதிபுத்தூர், புளியம்பட்டி, மரிச்செலம்பு, அமரபூண்டி மற்றும் ஆயக்குடி ஆகிய சபை புதுப்பிக்கப்பட்டு. மானூர் சபை கட்டுவதற்கு முதல் திட்டம் தீட்டினார்.

**Rev. Banning Washburn – 1988 – 1993**

இவர் அமைதியானவர், பழகுவதில் சிறந்தவர். C.S.I. உவக்மென் நடுநிலைப்பள்ளியை வளர்ச்சி பாதையில் கொண்டுவந்தவர்.

**Rev. M. Varadarajan. M. A. , B. D. , – 1993 – 2001**

இவர் அநேக ஆண்டு இறைப்பணி செய்தவர், மிகவும் அமைதியானவர், அமைதியாகயிருந்து அனைத்து செயல்களையும் தன்னுடைய தாலந்துகள் மூலம் திறன்பட செய்தவர். 125வது ஆண்டு இவருடைய நாட்களில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. 125வது ஆண்டு மலர் வெளியிடப்பட்டது. தென்புறம் விரிவாக்கம், பலீபிடம், வெஸ்ட்ரி அறைக்குமேல் கான்கீரிட், வெஸ்ட்ரி வழியாக அரங்கத்திற்கு வழி அமைத்தல் மற்றும் தரைத்தளம் போடப்பட்டு பேராயரால் மங்களப்படைப்பு செய்யப்பட்டது.

**Rev. J. Thasayyan. M. A. , B. D. , – 2001 – 2005**

இவர் ஆளும் திறமையுடைவர், நிர்வாகப் பணியை திறமையுடன் செய்யக்கூடியவர். இவருடைய காலத்தில் அனைத்து மக்களையும் அரவணைத்து நடத்தினார். இன்றுவரை இவருடைய இறைப்பணியை பாராட்டி மூத்த குடிமக்களின் மனதில் அன்பை நிலைநாட்டியுள்ளார். 2003ல் தென்பகுதி மற்றும் முன்பகுதி சீரமைக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. பாடல் குழுவினருக்கு ஸ்டேஜ் போடப்பட்டது. சபை மக்கள் உட்காரும் இடத்தில் டைல்ஸ் மற்றும் நன்கொடையின் மூலம் சேர் வாங்கி போடப்பட்டது.

**Rev. N. Arul Vijayakumar. M. A. , B. Ed. , B. D. , – 2005 – 2010**

இவருடைய காலத்தில் எல்வுட் பள்ளியின் முன்பகுதியில் கடைகள் கட்டப்பட்டு வாடகைக்கு விடப்பட்டது. இவர் மிகவும் பழகுவதில் ஜாலியாக பேசக்கூடியவர்.

**Rev. S. John Nagayar. M. A. , B. Th. , – 2010 – 2013**

இவருடைய காலத்தில் வடக்குபகுதி விரிவாக்கம் மற்றும் தரைத்தளம் போடப்பட்டது. அரங்கத்தின் முன்பகுதி கூரை போடப்பட்டது. மக்கள் உட்கார சேர் வாங்கி போடப்பட்டது. இவர் ஏழை மக்கள் மற்றும் கஷ்டப்படுகிற மக்களுக்கு உதவி செய்யக்கூடியவர். இவரிடம் ஒரு பெண் அழுதுகொண்டு தன் குடும்பத்தின் கஷ்டத்தை சொன்னது. அந்த பெண்ணை அழைத்து அப்போதுள்ள பேராயரிடம் உடனே ஒரு தையல் மிஷின் வாங்கி கொடுத்தார்.

**Rev.P.Edwin Jesuraj. M.A.,B.D.,M.Th.,–2013– 2014**

இவருடைய காலத்தில் ஏற்கனவே தொடங்கப்பட்ட வடக்குபகுதி விரிவாக்கத்தை 2013ல் மங்களப்படைப்பு செய்யவும், அநேகருக்கு திடப்படுத்தல் கொடுக்கவும் காரணமாக அமைந்தார். குருமனை கட்டுவதற்கு அடித்தளம் போடுவதற்கு காரணமாக அமைந்தார்.

**Rev. M. Sathish. M. A. , B. D. , – 2014 – 2017**

இவருடைய காலத்தில் குருமனை கட்டி முடிக்கப்பட்டது. மற்றும் பெரியகலையம்புத்தூர் திருச்சபை முழுவதையும் கட்டிமுடிக்கப்பட்டது. மக்கள் மத்தியில் பாடல் பாடுவதிலும், துதி ஆராதனை நடத்துவதிலும், செய்தி கொடுப்பதிலும் பாராட்டுப்பெற்றார். ஆலயத்திற்க்கென்று ஆண்டு விழா ஒவ்வொரு ஜனவரி முதல் வாரத்தில் அசனபண்டிகையாக கொண்டாடுவதை அறிமுகம் செய்தவர்.

**Rev. S. Kirupadoss. M. A. , B. D. , – 2017 – 2020**

இவர் அமைதியானவர், நல்ல செய்தி கொடுப்பார். நிர்வாகம் மற்றும் ஆளும் திறமை படைத்தவர் அமைதியில் வீரமிக்கவர். உடல் நிலை குறைவினால் இந்த ஆலயத்தில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

**Rev. D. Timothy Arulkumar. M.A.,B.D.,–2021–2023**

நீண்ட காலமாக பாடல் பவனி நிறுத்தி வைக்கப்பட்டியிருந்தது. மீண்டும் பாடல் பவனி நடத்தவும் அந்த குழுவினர்களுக்கு சீருடையுடன் பாட வைத்தார். பெரியகலையம்புத்தூர் திருச்சபையில் அருட்பணியாளருக்கு ஒரு வீடு கட்டவும், மேல் கூரை கான்கீரிட் போடும் வரை சிறப்பாக செய்தார். கணிணி மையமாக சந்தா போடுவதை அறிமுகம் செய்தவர். 150வது ஆண்டு நினைவு ஆராதனையும், அசனத்தையும் 2023 ஜனவரி மாதத்தில் முதல் வாரத்தில் நடத்தினார்.

**Rev. G. P. Raja. M. A. , M. S. W. , B. D. , – 2023. . . .**

01. 06. 2023 அன்று முதல் பொறுப்பேற்று தற்போது வரை இறைப்பணியை கடவுளின் நாமம் மகிமைக்காக செய்து வருகிறேன். குருசேகர குழு உறுப்பினர்களின் துணையுடன் பாடல் குழுவினர்க்கென்று தனி அறை, திருமுழுக்கு தொட்டி மறுமக்களப்படைப்பு, பெண்களுக்கென்று கூடுதல் கழிவறைகள், ஆலயத்தின் ஓடுகளை மறுசீர் செய்யப்பட்டுள்ளது. கல்லறைத்தோட்டத்தில் மையத்தில் பாதை அமைக்கப்பட்டுள்ளது. கெஸ்ட் அறைக்குமேல் சிறிய அறை கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. 150வது ஆண்டு நிறைவாக 2024ஆம் ஆண்டுக்கான காலண்டரில் திருச்சபையின் மிஷனரி வரலாறு மற்றும் திருச்சபையின் பழைய புகைப்படங்கள் போடப்பட்டுள்ளது. 150வது ஆண்டு நிறைவு விழாவை 2024 ஜனவரி முதல் வாரத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. 150வது ஆண்டு வரலாற்று கல்வெட்டு வைக்க திட்டமிடப்பட்டுள்ளது. பெரியகலையம்புத்தூர் திருச்சபையில் கட்டப்பட்டு வரும் அருட்பணியாளர் இல்லத்தை மதுரை பேராயர் Rt. Rev. Dr. D. ஜெயசிங் பிரின்ஸ் பிரபாகரன் அவர்கள் தலைமையிலும் மாண்புமிகு. Adv. C. பெர்ணான்டஸ் இரத்தின ராஜா (CSI. பொதுச்செயலர் & WCC உறுப்பினர்) அவர்கள் முன்னிலையில் மங்கலப்படைப்பு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.




### தென்காசி மாவட்டம் கீழச்சுரண்டை

# தூய. பவுல் ஆலய வரலாறு

**ஜா. ஜான் ஞானராஜ்**
கல்லிடைக்குறிச்சி

**கீழச்சுரண்டை - அமைவிடம்**

தென்காசி மாவட்டம் வீரகேரளம்புதூர் தாலுகாவில் சுரண்டை நகரம் உள்ளது. தென்காசியில் இருந்து சுமார் 17 கிலோமீட்டர் தொலைவில் சுரண்டை உள்ளது. தென்காசியிலிருந்து பாவூர்சத்திரம், கீழப்பாவூர் வழியாகவும் ஆய்க்குடி, சாம்பவர் வடகரை வழியாகவும் என இரு வழிகளில் சுரண்டையைச் சென்றடையலாம். மேற்கு தொடர்ச்சி மலையில் இருந்து புறப்பட்டு வரும் அனுமனாறு எனும் அனுமன் நதிக்கரையில் சுரண்டை உள்ளது. சுரண்டையின் கீழ் பகுதியில் கீழச்சுரண்டை உள்ளது.

**சுரண்டை அறிமுகம்**

2011 மக்கள் தொகை கணக்கெடுப்பு படி 35,272 பேர் வசிக்கின்றனர். அதில் ஆண்கள் 17,488 மற்றும் பெண்கள் 17,784. 1980 இல் சுரண்டை ஊராட்சி பேரூராட்சியாக மாறியது. 24.08.2021 இல் சுரண்டை பேரூராட்சி நகராட்சியாக மாறியது. 27 வார்டுகளைக் கொண்ட சுரண்டை நகராட்சியில் 5 வார்டுகள் கீழச்சுரண்டையில் உள்ளன.

**கீழச்சுரண்டை பெயர் காரணம்**

அனுமன் நதியின் வடகரையில் அமைந்துள்ள சுரண்டை நகரில் தோண்டிய இடங்களில் எல்லாம் நீரூற்று சுரந்து வந்ததாகவும் அதன் காரணமாக அந்த நதிக்கரையில் அமைந்த குடியிருப்பு சுரந்தை என்று அழைக்கப்பட்டு வந்தது. சுரந்தை என்பது பிற்காலத்தில் மருவி சுரண்டை என அழைக்கப்படலாயிற்று சுரண்டை குளத்தின் மேல் பகுதியிலும் கீழ் பகுதியிலும் ஊர் உருவாகி இருந்தது. கீழ்பகுதியில் உருவான ஊர் கீழச் சுரண்டை என அழைக்கப்பட்டது.

1820 – 1838 க்கு உட்பட்ட காலகட்டத்தில் கிறிஸ்தவ நற்செய்தியை சுரண்டை வட்டாரத்தில் அறிவித்து வந்த நெல்லை அப்போஸ்தலர் ரேனியஸ் ஐயரவர்கள் தமது மிஷன் ஊழிய நாட்குறிப்புகளில் மேலச்சுரண்டை, கீழச்சுரண்டை என்றே

இக்கிராமத்தை இருபகுதியாகக் குறிப்பிடுகிறார்.

**கனம். ரேனியஸ் ஐயரவர்களால் கீழச்சுரண்டைக்கு கிறிஸ்தவ நற்செய்தி**

C.M.S தலைமை கண்காணிப்பு மிஷனெரி நெல்லை அப்போஸ்தலர் ரேனியஸ் ஐயரவர்களால் கிறிஸ்தவ நற்செய்தி அக்காலத்து ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டம் முழுவதும் 1820 முதல் சிறப்பாக அறிவிக்கப்பட்டு வந்தது. 02.05.1832 அன்று சுரண்டைக்கு கீழ்ப்புறத்தில் உள்ள பரன்குன்றாபுரத்தில் CMS திருச்சபை உருவானது. அதே ஆண்டு சுரண்டைக்கு கீழ் பகுதியில் உள்ள இலட்சுமிபுரத்திலும் திருச்சபை உருவானது.

1833 இல் ரேனியஸ் ஐயரவர்களின் நற்செய்திப் பணியால் கீழச்சுரண்டையிலும் மேலச்சுரண்டையிலும் நாடார் சமூகத்தினர் சீர்திருத்த புராட்டஸ்டண்ட் கிறிஸ்தவத்தை ஏற்றதால் இரு இடங்களிலும் தனித்தனியே கிறிஸ்தவ சபைகள் உருவானது. ஆனால் வீரகேரளம்புதூரில் வசித்து வந்த ஊத்துமலை ஜமீன்தார் மற்றும் சுரண்டை ஜமீன்தார் மூலம் மேலச் சுரண்டை மற்றும் கீழச் சுரண்டை கிறிஸ்தவர்களுக்கு கடும் உபத்திரங்கள் கொடுக்கப்பட்டது.

**கீழச்சுரண்டையில் கிறிஸ்தவத்தின் தொடக்கம்**

1833 ஏப்ரலில் கீழச்சுரண்டையில் ஊர் தலைவரும் 75 குடும்பத்தினரும் கிறிஸ்தவத்தை ஏற்றனர். சபை தலைவராக இருந்த ஊர் தலைவர் பின் வாங்கியதால் 65 குடும்பங்கள் கிறிஸ்தவத்தை விட்டு பின் வாங்கினர். 10 குடும்பத்தினர் மட்டும் நிலைத்தனர். கீழச்சுரண்டை ஊர் தலைவரும் 65 குடும்பத்தினரும் பின்வாங்குவதற்கு ஜமீன்தார் கொடுத்த அழுத்தம் மிரட்டல் காரணமாக இருந்தது. நிலைத்து நின்ற பத்து குடும்பத்தினரையும் பின்வாங்க வைப்பதற்கு அவர்கள் அனைவரும் சேர்ந்து முயற்சி எடுக்கலாயினர்.

**கீழச்சுரண்டையும் சமூகமும்**

கீழச்சுரண்டையில் பெரும்பான்மையாக நாடார்கள் வசித்து வருகிறார்கள். கீழச் சுரண்டையின் மேற்கு பகுதியில் தேவேந்திர குல வேளாளர்கள் வசித்து வருகிறார்கள். கீழச் சுரண்டையில் வசித்த நாடார்கள் மட்டுமே ரேனியஸ் ஐயரவர்கள் காலத்தில் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.

**கீழச்சுரண்டை தந்திட்ட மாமனிதர்**

இந்திய கிறிஸ்தவத்தின் பிரபல சுவிஷேகர் தேவதாசர் இயேசு அழைக்கிறார் ஊழியத்தின் ஸ்தாபகர் சகோதரர் டாக்டர். டி. ஜி. எஸ். தினகரன் அவர்கள் கீழச்சுரண்டையைச் சொந்த ஊராகக் கொண்டவர்.

**கீழச் சுரண்டை நாடார்களின் பூர்வீகமும் குடும்பப் பெயர்களும்**

அக்காலத்து ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டத்தின் கீழ்ப்பகுதியில் இருந்து சுமார் 250 ஆண்டுகளுக்கு முன்பு குடியேறிய ஆறு குடும்பத்தினரின் வழித்தோன்றல்களே கீழச்சுரண்டை நாடார்கள் ஆவர். அவர்களது குடும்ப பெயர்கள் பின்வருமாறு: மயில் பக்தி குடும்பத்தினர், இக்குடும்பத்தினர் கீழச் சுரண்டையிலும் பங்களா சுரண்டையிலும் மேலச் சுரண்டையிலும் வசித்து வருகின்றனர். கச்சாலி குடும்பத்தினர், இக்குடும்பத்தினர் கீழச்சுரண்டை, பங்களாச்சுரண்டை, பரங்குன்றாபுரம், அதிசயபுரம், சாம்பவர் வடகரை ஆகிய ஐந்து கிராமங்களில் வசித்து வருகின்றனர். பணிக்கர் குடும்பத்தினர் இக்குடும்பத்தினர் கீழச் சுரண்டை, பங்களா சுரண்டை, பரங்குன்றாபுரம், மேலச் சுரண்டை, மருதுபுரம் ஆகிய ஐந்து கிராமங்களில் வசித்து வருகின்றனர். கணக்கர் (ஓலைக்கட்டு) குடும்பத்தினர், முத்துக்கண் குடும்பத்தினர், பாறையடி குடும்பத்தினர், மேற்கண்ட ஆறு குடும்பத்தினரின் வழித்தோன்றல்களே கீழச்சுரண்டையின் பூர்வ கால குடும்பத்தினர். மேற்கண்ட இவர்களில் ஒரு பகுதியினரே கீழச்சுரண்டையில் கிறிஸ்தவர்களாக மாறினார்கள்.

**சுரண்டை வழக்கு எனும் கீழச்சுரண்டை வழக்கு**

கீழச்சுரண்டையில் கிறிஸ்தவத்தில் நிலைத்திருந்த பத்து குடும்பத்தினர் மீதும் பொய் குற்றங்கள் சுமத்தப்பட்டு அதற்கான மனு தயாரிக்கப்பட்டு தென்காசி தாசில்தாரிடம் சமர்ப்பிப்பதற்காக தென்காசிக்கு போகும் வழியில் அதன் பொறுப்பாளருக்கு சுகவீனம் ஏற்பட்டு அவரால் தாசில்தாரிடம் செல்ல முடியாமல் வீடு திரும்பும் நிலை ஏற்பட்டது. இதை கண்ட கீழச் சுரண்டை ஊரில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. கிறிஸ்தவர்களுக்கு துன்பங்கள் கொடுப்பது நின்று போனது. இதன் காரணமாக பின்வாங்கி போன 65 குடும்பத்தார்களில் ஐந்து குடும்பத்தார் மீண்டும் திருச்சபையில் சேர்ந்தனர். பிற அறுபது குடும்பத்தாரும் ஜமீன்தாருக்கும் அவரது சொல்லைக் கேட்டு வந்த நாட்டாண்மையான ஊர் தலைவருக்கும் பயந்ததினால் பின்வாங்கிய நிலைமையிலேயே நின்றார்கள்.

**1835 இல் கீழச்சுரண்டை சபை நிலை**

18. 7. 1835 இல் பெற்றிட், எட்வர்ட் சார்ஜன்ட் ஜான் தேவசகாயம் ஆகிய மூன்று மிஷனெரிமார்கள் சபை சந்திப்பு மிஷன் சுற்றுப்பயணமாக கீழச்சுரண்டைக்கு வந்தார்கள். அப்போது கீழச்சுரண்டை சபை குறித்து 60 பேர்களைக் கொண்ட நல்ல சபை எனக் குறிப்பிட்டுள்ளனர்.

**கீழச்சுரண்டை சபையார் பங்களா சுரண்டைக்கு சென்று குடியேறுதல்**

1844 முதல் கீழச்சுரண்டையில் கிறிஸ்தவர்களாக மாறினவர்கள் அங்கு காணப்பட்ட தொடர் நெருக்கடி காரணமாக பங்களாச் சுரண்டைக்கு சென்று படிப்படியாக குடியேறினர். ஆதலால் கீழச்சுரண்டையில் நீண்ட காலமாக சபை இல்லாத நிலை இருந்தது.

**சிவகாசி கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்கள் கீழச்சுரண்டையில் குடியேறுதல்**

1899 இல் சிவகாசி சிவன் கோயில் நுழைவு போராட்டம் காரணமாக நாடார் மற்றும் மறவர் சமூகத்தினர் இடையே சிவகாசியில் கலவரம் ஏற்பட்டது. அந்த பெரும் கலவரத்தால் பாதிக்கப்பட்ட சிவகாசி நாடார்களில் ஒரு பகுதியினர் தங்கள் சமூகத்தினர் பெரும்பான்மையாக வசித்து வந்த தெற்கு நோக்கி நகர்ந்து வந்தனர். அதில் ஒரு பகுதியினர் தற்போது புதுசுரண்டை என அழைக்கப்படும் மேலச் சுரண்டையிலும் கீழச்சுரண்டையிலும் குடியேறினர். இவ்வாறு

குடியேறியவர்களில் பெரும்பான்மையோர் கிறிஸ்தவ சமயத்தை ஏற்றுக் கொண்டார்கள். அதற்கு சில காரணங்கள் காரணமாக இருந்தது.

**சுரண்டை வாழ் சிவகாசி நாடார்களின் சமய மாற்றத்திற்கான காரணங்கள்**

சிவகாசி கலவரம் காரணமாக சிவகாசியில் வசித்து வந்த நாடார்கள் அங்கிருந்து இடப்பெயர்ச்சி செய்து கீழச் சுரண்டையிலும் மற்றும் மேலச் சுரண்டை எனும் புதுச்சுரண்டையில் உள்ள சிவகுருநாதபுரத்திலும் குடியேறியிருந்தனர். கீழச்சுரண்டையைப் பூர்வீகமாகக் கொண்ட நாடார்களுக்கும் கீழச்சுரண்டையில் குடியேறியிருந்த சிவகாசி நாடார்களுக்கும் இடையே குடியேறிய இருபது ஆண்டுகளுக்குள் நல்லிணக்க குறைபாடு ஏற்பட்டது. சுரண்டை வாழ் சிவகாசி நாடார்கள் தங்களுக்குள்ளேயே திருமண உறவுகளைக் கொண்டிருந்தனர். தனித்துவத்தைக் கடைபிடித்தனர். தங்களுக்குள் கீழச்சுரண்டை வாழ் சிவகாசி நாடார்கள் பொதுமகமை எனும் தனி உறவின் முறை மகமை அமைப்பை வைத்திருந்தனர்.

கீழச்சுரண்டையில் வசித்து வந்த இவர்களுடைய உறவினர்களில் அநேகர் சிவகாசியில் கிறிஸ்தவ மிஷனெரிகளின் நற்செய்தி பணியால் கிறிஸ்தவத்தை ஏற்றிருந்தனர். அவர்களுக்குள் பல இரகசிய கிறிஸ்தவர்களும் இருந்தனர்.

சிவகாசியில் இருந்து போதகர்கள் தலைமையில் குழுவாக இவர்கள் மத்தியில் நற்செய்தி பணி செய்வதற்காக மேல சுரண்டைக்கும், கீழ சுரண்டைக்கும் வந்து செல்வது வழக்கமாக இருந்தது.

சிவகாசி கலவரத்தை சிறப்பான முறையில் அடக்கி ஆயுதப்படை போலீஸ் பிரிவை சிவகாசிக்குள் கொண்டு வந்து நிறுத்தி பாதுகாப்பு வழங்கிய ஆங்கிலேய அரசு மீது சிவகாசி வாழ் நாடார்கள் மற்றும் சுரண்டை வாழ் சிவகாசி நாடார்கள் நல்லெண்ணம் கொண்டிருந்தனர். ஆதலால் ஆங்கிலேய மிஷனெரிமார்களின் தலைமையின் கீழ் பணி செய்து வந்த கிறிஸ்தவ போதகர்களின் நற்செய்திக்கு செவி சாய்த்தனர்.

பட்டணத்து ஐயா, பட்டணத்து அம்மா என்று அழைக்கப்பட்ட பங்களாச் சுரண்டை திரு. ஜான் சாமுவேல் தலைமை ஆசிரியர் மற்றும் அவரது மனைவி கிரேஸ் சாமுவேல் ஆகியோர் கீழ சுரண்டை மற்றும் மேல சுரண்டை எனும் புது சுரண்டை கிராமங்களில் 1910 க்கும் 1925 க்கும் உட்பட்ட காலகட்டத்தில் பணிசெய்த நற்செய்தி பணி பங்களாச் சுரண்டை CMS நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியராக இருந்து சுரண்டை வட்டாரத்திற்கு செய்த கல்வி பணி கீழச்சுரண்டையில் அநேக குடும்பத்தினர் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொள்வதற்கு காரணமாக அமைந்தது.

கால் சட்டை தாத்தா என்று அழைக்கப்பட்ட திரு. சுவிசேஷமுத்து Tr உபதேசியார் அவர்கள் கீழச்சுரண்டையில் செய்த நற்செய்திப் பணி மற்றும் சபை ஊழியர் பணி. தொடக்க கால கீழச் சுரண்டை சபையின் சபை ஊழியராக பல ஆண்டுகள் இவர் பணி செய்ததாக செவிவழி செய்திகள் மூலம் அறிய முடிகிறது. மேற்கண்ட காரணங்களால் சிவகாசியிலிருந்து சுரண்டையில் குடியேறி இருந்த நாடார்களில் பெரும்பாலானோர் (90%) கிறிஸ்தவர்களாக மதம் மாறினார்கள்.

**சிவகாசி கலவரத்திற்குப் பின் சிவகாசியில் இருந்து வெளியேறி கீழச்சுரண்டையில் குடியேறிய குடும்பத்தினர்கள்**

ஊர்க்காவலன் குடும்பம், இடமாறி (எட்டு காலன்) குடும்பம், கடையத்தார் (கடையம் வீடு) குடும்பம், மாடன் கூட்டம் குடும்பம், பாக்கியம் குடும்பம், அருஞ்சுனை காத்த அய்யனாரை வழிபட்ட அய்யங்கால் குடும்பம், பொதுவுடையான் குடும்பம், வெற்றி வீரியன் (வீரிருப்பு வீரன்) குடும்பம்

**புதுப்பிக்கப்பட்ட கீழச்சுரண்டை சபை வரலாறு**

1899 இல் நடைபெற்ற சிவகாசி கலவரம் காரணமாக சிவகாசியில் இருந்து வெளியேறிய குடும்பத்தினர் மேலச்சுரண்டையிலும் கீழச்சுரண்டையிலும் குடியேறினார்கள் என்பதை அறிந்து கொண்டோம். அந்த காலகட்டத்திற்குப் பின் சுமார் இருபது ஆண்டுகளில் அந்த குடும்பங்களைச் சேர்ந்த திரு பி. வை. மாசிலாமணி, திரு வி. எஸ். ராஜேந்திரன் ஆகிய இரு பெரியவர்கள் மற்றும் சிலரது முயற்சிகள் காரணமாக 1925, 1926 இல் கீழச்சுரண்டை சபை புதுப்பிக்கப்பட்டது. 1926 ஏப்ரலுக்குள் சிவகாசியில் இருந்து கீழச்சுரண்டையில் குடியேறி இருந்த நாடார் சமூகத்தினரில் பெரும்பாலானோர் (90%) கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

**கீழச்சுரண்டையின் முதல் தேவாலயம்**

கீழச்சுரண்டையில் தேவாலயம் வேகமாக கட்டப்பட்டு தூய. பவுல் தேவாலயம் என்ற பெயரில் 09. 04. 1926 இல் கனம். G. T. செல்வின் ஐயரவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த தேவாலயம் 25 அடி நீளமும் 16 அடி அகலமும் கொண்டதாக இருந்தது.

**கீழச்சுரண்டை தேவாலய விரிவாக்கம்**

கனம். M. செல்லத்துரை ஐயரவர்கள் பங்களா சுரண்டை சேகர குருவானவராகவும் திரு. N. செல்லக்கனி அவர்கள் கீழச்சுரண்டை சபை ஊழியர் ஆகவும் பணி செய்த காலத்தில் கீழச்சுரண்டை தேவாலயத்தின் மேற்கு பகுதி விரிவாக்கம் செய்யப்பட்டது. ஆல்டர் திருவிருந்து கிராதி கட்டி முடிக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் சில முக்கிய குடும்பத்தினர் தேவாலயக் கட்டுமானப் பணிகளுக்கு உறுதுணையாக இருந்தார்கள். விரிவாக்கப்பட்ட தேவாலயம் நெல்லை பேராயர் மகாகனம். எஸ். தானியேல் ஆபிரகாம் அவர்களால் 30. 11. 1984 இல் பிரதிஷ்டை செய்யப்பட்டது. விரிவாக்கப்பட்ட தேவாலயம் 35 அடி நீளமும் 25 அடி அகலமும் கொண்டதாக இருந்தது.

**கீழச் சுரண்டை தூய. பவுலின் ஆலய சபை ஊழியர் வீடு பிரதிஷ்டை**

கீழச் சுரண்டை சபை ஊழியர் ஆக திரு. I மோகன் அவர்கள், பங்களா சுரண்டை சேகர தலைவராக அருள்திரு I தேவசகாயம் ஐயரவர்கள் பணி செய்த காலத்தில் கீழச் சுரண்டை தூய. பவுலின் ஆலய சபை ஊழியர் வீடு 18. 12. 2002 இல் நெல்லை பேராயர் மகாகனம். S. ஜெயபால் டேவிட் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

**கீழச் சுரண்டை புதிய தேவாலயம் - தற்போதைய தேவாலய பிரதிஷ்டை**

விரிவாக்கம் செய்யப்பட்ட தேவாலயம் வளர்ந்து வந்த கீழச் சுரண்டை சபை மக்கள் அமர்ந்து ஆராதிக்க போதுமானதாக இல்லாததால் சபையார் புதிய தேவாலயம் கட்ட திட்டமிட்டனர். பழைய தேவாலயம் முற்றிலும் அகற்றப்பட்டு புதிய தேவாலயம் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டது. புதிய தேவாலயம் கீழச் சுரண்டை சபை ஊழியர் ஆக திரு. G. சாமுவேல் செல்லத்துரை, கீழச் சுரண்டை சேகர குருவானவர் ஆக டீக்கன். ரிச்சர்டு சாமுவேல் ஐயரவர்கள், சேகர தலைவர் ஆக அருள்திரு. B E. வில்சன் ஐயரவர்கள் பணி செய்த காலத்தில் தூத்துக்குடி நாசரேத் திருமண்டல பேராயர். மகாகனம். J. A. D. ஜெபச்சந்திரன் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. புதிய தேவாலயம் 105 அடி நீளமும் 35 அடி அகலமும் கொண்டதாக உள்ளது. புதிய தேவாலய முன்மண்டபம் 16 அடி நீளமும் 40 அடி அகலமும் கொண்டது. சுரண்டை கோமதி ஜுவல்லர்ஸ் திரு. S. V. பழனிச்சாமி அவர்கள் புதிய தேவாலய கட்டுமான பணிக்கு அதிகளவில் நன்கொடை கொடுத்து பேருதவி செய்துள்ளார்கள்.

**தேவாலய கோபுரம்**

கீழச்சுரண்டை தேவாலய கோபுரம் 96 அடி உயரம் கொண்டது ஆகும். தேவாலய கோபுரத்திற்கு 13. 09. 1992 இல் கனம். காந்தி செல்வின் ஐயரவர்கள் ஜெபிக்க கீழச் சுரண்டை மண்ணின் மைந்தர் இயேசு அழைக்கிறார் ஊழியத்தின் நிறுவனர் திரு. D. G. S. தினகரன் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. 12. 06. 1996 இல் நெல்லை பேராயர் மகாகனம். ஜேசன். S. தர்மராஜ் அவர்களின் பிரதிநிதியாக வந்த கனம். காந்தி செல்வின் ஐயரவர்களால் தேவாலய கோபுரம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கை அடிப்படையில் 1950 க்குப் பின் சுரண்டை சபை வளர்ச்சி நிலை:-

1956 -1957 திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி கீழச்சுரண்டையில் 164 ஞானஸ்நானம் பெற்றவர்கள் இருந்தனர். 55 பரி. நற்கருணைக்காரர்கள் இருந்தனர்.

1962 -1963 திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி கீழச்சுரண்டையில் 186 ஞானஸ்நானம் பெற்றவர்கள் இருந்தனர். 73 பரி. நற்கருணைக்காரர்கள் இருந்தனர்.

1970 -1971 திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி கீழச்சுரண்டையில் 266 ஞானஸ்நானம் பெற்றவர்கள் இருந்தனர், 125 பரி. நற்கருணைக்காரர்கள் இருந்தனர்.

1997 - 1998 திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி கீழச்சுரண்டையில் 387 ஞானஸ்நானம் பெற்றவர்கள் இருந்தனர். 285 பரி. நற்கருணைக்காரர்கள் இருந்தனர்.

2002 - 2003 திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி கீழச்சுரண்டையில் 397 ஞானஸ்நானம் பெற்றவர்கள் இருந்தனர். 305 பரி. நற்கருணைக்காரர்கள் இருந்தனர்.

கீழச்சுரண்டையில் இருந்து உருவான காமராஜ் நகர் இராக்லந்து திருச்சபையில் 105 ஞானஸ்நானம் பெற்றவர்கள் இருந்தனர். 63 பரி. நற்கருணைக்காரர்கள் இருந்தனர்.

**தற்போதைய கீழச் சுரண்டை சபை நிலை**

கீழச்சுரண்டை திருச்சபையில் 140 குடும்பத்தினர் இருக்கிறார்கள். கீழச் சுரண்டையில் இருந்து உருவான காமராஜ் நகர் CSI இராக்லந்து திருச்சபையில் சுமார் 100 குடும்பத்தினர் இருக்கிறார்கள். கீழச் சுரண்டை சபை ஊழியராக திரு. சாமுவேல் ஆபிரகாம் அவர்கள் பணி செய்து வருகிறார்கள். கீழச் சுரண்டை சேகர குருவானவர் ஆக அருள்திரு. ஜான் தர்மராஜ் ஐயரவர்கள் பணி செய்து வருகிறார்கள்.


கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் நடத்தும் கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் மாத ஆய்விதழை நண்பர்கள், உறவினர்களுக்கு அறிமுகப்படுத்த அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன். கடந்த நான்கு வருடங்களாக ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து வெளி வந்து கொண்டு இருக்கின்றது. மறைக்கப்பட்ட, மறைந்த, மறந்த வரலாற்றுப் பக்கங்களை அடுத்த தலைமுறையினரின் கரங்களில் கொடுப்பது நம் கடமை.

சங்கத்தின் 'கிறிஸ்தவ வரலாற்று சுவடுகள்' மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள விரும்பினால் அதற்கான ஆண்டு சந்தா 600 ரூபாய் ஐந்து ஆண்டுக்கான சந்தா 3000 ரூபாய் மட்டுமே. மற்றும் G-Pay மூலம் நன்கொடை செலுத்த விரும்பினால் 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும். காசோலை மற்றும் வரைவோலை செலுத்த 'கிறிஸ்தவ வரலாற்று சங்கம்' (Christian Historical Society) என்ற பெயரில் எடுத்து அனுப்பவும்.

நன்கொடை சந்தா செலுத்திய தகவலை கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசி எண் அல்லது வாட்ஸ் ஆப் அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு மறக்காமல் தெரியப்படுத்தவும்.

**வங்கி விபரம்**

**Name: Christian Historical Society**

**A/c Number : 1748 020000 4906**

**Bank name : Federal Bank**

**IFSC code: FDRL0001748**




# பாளையங்கோட்டை பரி.திரித்துவ அத்தியக்ஷாலயம்

திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி திருமண்டலத்தில் உள்ள மிகப் பெரிய புராதனமான ஆலயம் பாளையங்கோட்டை பரி. திரித்துவ பேராலயம். இப் பரிசுத்த ஸ்தலத்தைக் கட்டி முடிக்கும் பாக்கியம் நெல்லை அப்போஸ்தலன் கனம் C.T.E. ரேனியஸ் (RHENIUS, Charles Theophilus Ewald 1790- 1838) ஐயருடையதாயிருந்தது.

- C.T.E. ரேனியஸ் C.M.S. (Church Mission Society- 1799) சங்கத்தின் முதல் திருநெல்வேலி மிஷனெரியாக 1820ம் ஆண்டு ஜூலை மாதம் 7ம் தேதி பாளையங்கோட்டை வந்து சேர்ந்தார். நெல்லை திருமண்டலம் அந்த நல்ல நாளையும்,
- S.P.C.K. (Society for Promoting Christian Knowledge -1698) சங்கத்தாரின் முதல் மிஷனெரியாக, சங்கை ஷ்வார்ட்ஸ் (SCHWARTZ, Christian Friedrich (1726-1798) ஐயரால் அனுப்பப்பட்ட கனம் ஜூ. ம். ஜெனிக்கெ (JAENICKE, Joseph Daniel 1759-1800) ஐயர் பாளையம்கோட்டை சேர்ந்த 1791 ம் வருஷம் அக்டோபர் மாதம் 16ம் நாளையும்,
- S.P.G. (Society for the Propagation of the Gospel-1701) சங்க முதல் மிஷனெரியாக கனம் ம். டேவிட் ரோஸன் (ROSEN, David 1791-1857) ஐயர் தூத்துக்குடித் துறைமுகத்தில் இறங்கிய 1829ம் ஆண்டு நவம்பர் மாதம் 4ம் நாளையும்,

என்றும் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி தென்காசி மாவட்ட திருச்சபை மக்கள் ஆண்டுதோறும் இந்த நாட்களை மனதில் கொண்டு ஆண்டுதோறும் துதித்து ஸ்தோத்திரம் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

சில மாதங்கள் கழிந்த பின்பு கனம் ரேனியஸ் ஐயருக்கு உதவியாக கனம் B ஷ்மிட் (SCHMID, Ludwing Bernard Ehergott 1788-1857) ஐயர் வந்தார். சுமார் ஒன்றரை வருஷங்களாக இவர்கள் ஊழியத்தில் ஆத்தும ஆதாய அறுவடை ஏதும் காணப்படவில்லை. அந்த காலகட்டத்தில் பாளையங்கோட்டையில், தஞ்சை S. P. C. K. மிஷன் மிஷனெரிமார்களுக்கு சொந்தமான நெல்லை திருச்சபையின் தாய் என்று அழைக்கப்படும் கிளாரிந்தா (Clarinda) உருவாக்கிய ஒரு சிறு சபை, கிளாரிந்தா ஆலயத்தில் ஆராதித்து வந்தது. சத்தியநாதனையர் (SATYANATHAN 1853-1815) காலத்திற்குப்பின் இச்சிறு சபை ஆபிரகாம், விசுவாசநாதன் பாக்கிய நாதன், அடைக்கலம் (VEDANAYAGAM Ord 1811, ABRAHAM Ord 1811, visuvasanathan Ord 1810, PAKKIANATHAN Ord




1817, ADEIKALAM Ord 1811, NALLATHAMBAI Ord 1817 ) என்ற பல போதகர்களால் காலாகாலங்களில் கண் காணிக்கப்பட்டு வந்தது. C.M.S. மிஷனெரிமாருக்கு முதல் ஆத்தும ஆதாய பலன் கிடைத்தது. 1822ம் ஆண்டு மார்ச் மாதம் 10 ம் நாள் அது. அந்த நாள் முதல் பாளையங்கோட்டை, திருநெல்வேலி, திருப்புளியங்குடி, கீழப்பாட்டம். வண்ணார்பேட்டை முதலியவிடங்களில் சபைகள் உண்டாயின.

ரேனியஸ் ஐயர் பாளையங்கோட்டையில், கனம்.- J.ஹாக் (HOUGH, James 1789-1847) ஐயருடைய வீட்டையும், தற்காலம் கதீட்ரல் நிலைப்பள்ளி, மேரி சார்ஜென்ட் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பரி. திரித்துவ பேராலயம் (அன்றைய உபதேசிமார்கள் அல்லது நாட்டையர்மார் பயிற்சிசாலை) கட்டப்பட்டுள்ள இடங்களை விலைக்கு வாங்கி சில கட்டடங்களையும் கட்டி முடித்தார்.

போதனா பாட சாலை, (கதீட்ரல்) பெண் பாடசாலை முதலியவற்றின் ஆதித் தந்தையரால் இரு பாட சாலைகளும் செமினரியும் ஸ்தாபிக்கப்பட்டன. ஆனால் ஆராதனை சில காலம் கிளாரிந்தாவின் ஆலயத்திலேயே நடைபெற்று வந்தது. பின்னால் C.M.S. சபைக்கென்று மண்சுவர்களாலான ஓர் ஆலயம் கட்டப்பட்டது.

1824க்குள் திருநெல்வேலி மாவட்டம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து கனம் ரேனியஸ் ஐயர் சபைகளை உருவாக்கிவிட்டார். டோனாவூர், சாத்தன்குளம், அருளூர், ராஜபாளையம் முதலியவிடங்களிலும் இன்னமும் அநேக சின்ன சின்ன கிராமங்களிலும் சபைகள் உதயமாயின. எனவே பாளையங்கோட்டையில் இருந்து நிர்வகிக்க ஒரு மத்திப ஆலயம் (Central Church) அவசியமாக தேவைப்படுகின்றது.

ரேனியஸ் அக்காலத்தில் வாழ்ந்து வந்த பிரமுகர்களான சுலோச்சன முதலியார், அரியநாத முதலியார், வெங்கு முதலியார் முதலிய தனவந்தர்களுடைய (செல்வந்தர்கள்) நன்மதிப்பையும் நட்பையும் மாவட்ட கலெக்டர், நீதிபதி, பாளைய ராணுவ அதிகாரிகளான ஆங்கிலேய பெரியோர்களின் நன்மதிப்பையும் பெற்றிருந்தார். ஆலயம் கட்டவேண்டும் என்னும் ஆசை தோன்றியதும் அதைத் தம் நண்பர்களுக்கு அறிவிக்கவே, நண்பர்களும் அந்த திட்டத்திற்கு உடன்பட்டு ஆலயம் கட்ட ஒத்தாசை தர உடன்பட்டனர். எனவே ஐயர் 1826ம் வருஷம் ஜனவரி மாதம் 3ம் நாள் ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

**அந்த நிகழ்ச்சியை அவரே எழுதியுள்ளது படி: ஜனவரி 3.**

இன்று ஆலயத்திற்கு அஸ்திபாரம் அமைக்கும் பாக்கியம் பெற்றோம். அதிகாரிகளில் அநேகர் விஜயம் செய்திருந்தனர். சபையாரும், செமினரி மாணவரும் சுதேசிகளில் ஏராளமானவர்களும் வந்திருந்தனர். கீதம் ஒன்று பாடிய பின் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் ராணுவ குரு டாக்டர் ஹட்சின்சன் ஆங்கிலத்தில் ஓர் ஜெபம் செய்தார். பின்னர் நான் இவ்வாராதனை முறையை விளக்கிச் சபையாருக்குத் தமிழில் ஓர் பிரசங்கம் செய்து ஜெபித்தேன். மாவட்ட கலெக்டர் ஸ்ரீ மன்ரோ ஆங்கிலத்திலும் தமிழிலும் சில விஷயங்கள் எழுதப்பட்ட தாட்களை உள்ளடக்கிய ஓர் சீசாவை உள் வைத்து இவ்விதமாய் அஸ்திபாரம் அமைக்கும் சடங்கைச் செய்து முடித்தார். பின் நான் ஆங்கிலத்திலும், சகோதரன் ஷ்மிட் தமிழிலும் ஜெபித்து ஆசீர்வாதம் கூறினோம். வந்திருந்த அனைவரும் இச்சடங்கில் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். ஆண்டவர் நாங்கள் ஏறெடுத்த ஜெபங்களைக் கேட்பாராக! வாஸ்தவத்தில் அவர் கேட்கவே கேட்டார். எங்களுடைய இப் பணியை இப்போதே ஆசீர்வதிக்கிறார். பலவிடங்களிலிருந்தும் எங்களுக்குப் பண உதவி வந்துகொண்டிருக்கிறது. இக்கட்டடச் செலவில் (C.M.S.) சங்கத்தார் பொறுக்கவேண்டிய செலவு அதிகமிராது'.

கட்டிட வேலை துரிதமாய் நடைபெற்றது. அவ்வருஷம் ஜூன் மாதம் 26 ம் நாள் ரேனியஸ் ஐயர், 'இன்று யெகோவாவின் திருப்பணிவிடைக் கென்று புதிய ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்து அகமகிழ்ந்தோம். காலை 10 மணிக்கு ஆங்கில ஆராதனை ஆரம்பமாயிற்று. டாக்டர் ஹட்சின்சன் பரிவுடன் முகவுரைப் பிரசங்கம் செய்தார். அதில் சுவிசேஷ நற்செய்தியைப் பரவச்செய்யும் தொண்டில் பலவிதங்களிலும் பரிசுத்த வேதாகம வாக்குத் தத்தங்கள் தரும் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் எடுத்துக்காட்டி, முழு இருதயத்தோடும் பலரும் அப்பணியில் ஒத்துழைக்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்தினார். பின் கீதம் ஒன்று பாடி முடிந்ததும் நான் பேதுரு 2ம் அதிகாரத்தை வாசித்துப் பிரதிஷ்டை ஜெபம் செய்தேன். பின்னர் வேறொரு

கீதம் பாடப்பட்டதும் நான் தமிழ்ச் சபையாருக்கு ஓர் சுருக்கமான பிரசங்கம் செய்ய சகோதரன் ஷ்மிட் ஆங்கிலத்தில் ஜெபம் செய்து நிகழ்ச்சியை முடித்தார். மாலையில் அதே முறையில் தமிழ் ஆராதனை நடத்தினோம். அந்நாள் ஒருக்காலும் மறக்க முடியாத ஓர் நாளாகும். அன்று ஏறெடுக்கப்பட்ட ஜெபங்கள் அனைத்தும் ஆண்டவர் சமூகத்தில் கேட்கப்படுவதாக! கட்டிட விஷயத்தில் வேலையாட்களால் எனக்குச் சில சங்கடங்கள் ஏற்பட்டதுண்டு. ஆனால் அதற்கீடாக, என் சிநேகிதர் தங்கள் பொருளாலும் பணத்தாலும், ஆலய உபயோகத்திற்கென்று ஈந்தளித்த நன்கொடைப் பொருட்களாலும் என்னை மிகவும் உற்சாகப்படுத்தினர். டாக்டர் ஹட்சின்சனும், அம்மையாரும் பணவுதவி செய்ததுமன்றி நற்கருணைப் பாத்திரங்களும், பிரசங்க பீடம், ஜெப பீடம் முதலியவற்றைப் பத்திரப் படுத்தக்கூடிய திரைகளும் தந்துதவினர்' இவ்வண்ணம் இவ்வாலயம் நூற்று எழுபத்தைந்து நாட்களுக்குள் கட்டி முடிவுற்றுப் பிரதிஷ்டையுமாயிற்று.

ஆலயத்தின் வர்ணனை 1830ம் வருஷம் பாளையங்கோட்டை ஊழியத்தை மேற்பார்வை செய்வதற்கென்று அங்கு விஜயம் செய்த சென்னை ஆர்ச்டீக்கன் சங்கை ராபர்ட்சன் ஐயர், அவ்வருஷம் பெப்ருவரி 18ம் எழுதிய கடிகத்தில் காணப்படுகிறது. அதிலிருந்து நாம் அறியக்கூடியது என்னவென்றால்:

ஆலயம் அகலமாயும் அழகிய தோற்றமுடையதாயுமிருந்தது. தூண்கள் எதுவுமின்றியே 27 அடி அகலமுடையதாயும் உற்சாக மூட்டக்கூடியதாயும் காணப்பட்டது. குருவறை (Vestry) கீழ் பாகத்தில் (அதாவது ஆலய ஒழுங்குப்படி கீழ்ப்பாகம் திசைப்படி மேல்ப்பாகம்) இருந்தது. வாசல் இப்போதுள்ளபடியே திருமேஜை கிட்டத்தட்ட மத்தியில் வைக்கப்பட்டிருந்தது. ஜெப பீடம் திருமேஜைக்குப் பின்னால் வைக்கப்பட்டிருந்தது. ஆலயத்தினுள் முன் வாசலுக்கு மேலாக காலரி (Gallery) யும் இருந்தது. ஆராதனைகளில் உபயோகப்படுத்தவென்று ஓர் சிறு ஆர்மோனியமும் காணப்பட்டது. பழைய மண் சுவர் ஆலயம் அக்காலத்தில் பாளையங்கோட்டையில் வியாபாரம் செய்துவந்த ரைட்டர்ஸ் அண்டு கம்பெனியாருக்கு (Writers & co) விற்றுவிடப்பட்டது.

1826 முதல் 1835 வரை இவ்வாலயம் நெல்லை மாவட்ட C.M.S. கிறிஸ்தவர்களுக்கு மத்திய ஆலயமாகவும் இருந்து வந்தது. இக்காலத்தில் C.M.S. ஊழியம் விரிவடைந்து சுமார் 200 கிராமங்களில் சபைகளுண்டாயின. மெஞ்ஞானபுரம், இடையன்குளம், நல்லூர், சுரண்டை, பண்ணை விளை, கடாட்சபுரம், அனுக்ரகபுரம், சீவலசமுத்திரம், பிரகாசபுரம், ஆறுமுகநேரி சபைகள் இக்காலத்தில் தோன்றியவையேயாம். ஞானஸ்நானம் பெற்றவர்களும், பெறாதவர்களுமான கிறிஸ்தவர்களின் தொகை 1835 ல் 11000 க்கு மேலாக இருந்தபோதிலும், கிராமச் சபைகளில் நற்கருணைக்காரர் வெகு சிலரே.

எனவே மாதந்தோறும் முதல் ஞாயிற்றுக்கிழமை பாளையங்கோட்டை ஆலயத்தில் நடைபெறும் பரி. நற்கருணை ஆராதனைக்கு ஆழ்வானேரி, முக்கூடல், இடையன் குளம், வானரமுட்டி, புதியம்புத்தூர் (அக்காலம் இது ஓர் C.M.S.சபை) இலந்தைக்குளம் முதலிய தூரமான இடங்களிலிருந்துங்கூட விசுவாசிகள் மத்திய ஆலயத்துக்கு வருவதுண்டு. பாளையங்கோட்டை தவிர, டோனாவூர், சாத்தன்குளம், நல்லூர் என்ற விடங்களில் மட்டுமே அக்காலம் மிஷனெரிமார் இருந்து வந்தனர்.

1835ல் ரேனியஸ் ஐயர் C.M.S. சங்க சென்னைக் கமிட்டியாருடன் சில முக்கிய விஷயங்களில் ஒத்துப்போகக்கூடாத நிலைமை ஏற்பட்டப்படியால் தம் உடன் ஊழியர்களோடு, C. M. S ஐ விட்டுப் பிரிந்தார். சங்கத்தார் ரேனியஸ் ஐயரின் ராஜினாமாவை ஏற்றுக்கொண்டு கனம் ஜியார்ஜ் பெற்றிற், கனம் டென்ற், சார்ஜன்ட், பிளாக்மன் (BLACKMAN, Charles 1802-1868), DENT,Edward 1803-1849), PETTITT,George 1808-1873) SARGENT, Edward 1815-1889) முதலிய மிஷனெரிகளை அனுப்பினர். திருநெல்வேலிச் சபை இரண்டுபட்டது. ஆனாலும் 1838 இல் கனம் ரேனியஸ் மரித்தபின் பெற்றிற், சார்ஜன்ற், ஐயர்மாரின் முயற்சியினால் மறுபடியும் ஐக்கியப்பட்டது.

1835ம் வருஷம் வரைப் பாளையங்கோட்டை ஆலயத்திற்குப் பெயரில்லை. இக்குறை எதிர்பாராவண்ணம் நீங்கிற்று. எப்படியெனில்:

கனம் ரேனியஸ் ஐயருக்குதவியாக மாயவரம் C.M.S. மிஷனில் வேலை செய்துவந்த கனம் ஜாண் தேவசகாயம் (DEVASAGAYAM, John 1785-1864) ஐயர் 1832ம் வருஷம் பாளையங்கோட்டைக்கு அனுப்பப்பட்டார். இவர் 1830ம் வருஷம் கல்கத்தா அத்தியக்ஷரிடம் உதவிக் குருப்பட்டம் பெற்றிருந்தார். 1835 இல் ரேனியஸ் ஐயர் C.M.S.ஐ விட்டுப் பிரிந்தபோது, இவர் மட்டும் ரேனியஸோடு சேராது தனித்து நின்று, பின் பெற்றிட் ஐயருடன் சேர்ந்துகொண்டார். பெற்றிட் தேவசகாயம் ஐயரை மிஷனெரி ஸ்தானத்திலேயே பாவித்து தமக்குதவியாக நியமித்தார்.


1836 ஜனவரியில் பிளவுண்ட சபைகளை ஒன்றுபடுத்தும் நோக்கத்துடன் சென்னை பிஷப் மகாகனம் காரி பாளையங்கோட்டைக்கு வந்த சமயத்தில் தேவசகாயம் ஐயருக்கு குரு (Priest Orders) கொடுப்பது அவசியம் எனக் கண்டு அம்மாதம் 30ம் தேதி பாளையங்கோட்டை ஆலயத்தில் அவருக்கு குருவபிஷேகம் நடத்தப்பட்டது. ஆராதனை முடிந்தபின் குருவபிஷேகக் கட்டளைத் தஸ்தாவேஜில் (பதிவேட்டில்), பட்டாபிஷேகம் நடைபெற்ற ஆலயத்தின் பெயர் எழுதப்பட வேண்டிய இருந்தபடியினால், அத்தியக்ஷர் மிஷனெரி பெற்றிட் ஐயரிடம் 'ஆலயப் பெயர் என்ன', வென்று கேட்க, ஐயர் 'பெயரில்லை', என்றார். எனவே அத்தியக்ஷர் அவ்விடத்திலேயே 'இது திரித்துவ ஆலயம்', என்று புன்முறுவலுடன் கூறி, அவ்வண்ணமே பதிவேட்டிலும் குறிப்பிட்டார். இவ்வண்ணமாய் திரித்துவ ஆலயம் என்ற திருநாமம் நம்மாலயத்தில் நடைபெற்ற முதல் குருப்பட்டாபிஷேகத்தன்று, சென்னையின் முதல்

அத்தியக்ஷரால் கூட்டப்பட்டது.

கனம் G. பெற்றிட் ஐயர் காலத்தில் திருச்சபை வளர்ந்து பெருகிற்று. சபையின் நன்மை கருதி 1840ம் ஆண்டு ஆலயம் விரிவாக்கம் செய்யப்பட்டது. மேலும் 1845ம் ஆண்டு ஆலய கோபுரமும் அதில் ஓர் அறையும் கட்டப்பட்டது. அந்த அறையில் வைத்து தான் முதன் முதலில் கனம் பெற்றிட் ஐயர் ஜெபித்து இந்திய மாணவர்களுக்கான குருப்பட்ட வேதாகம பள்ளி 'திருநெல்வேலி நிறுவனம்' என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. கனம் சார்ஜெண்ட் அவர்கள் பாளையங்கோட்டை மிஷனரியாக இருந்த போது மொழிபெயர்ப்பு பணிகள் இங்கு வைத்து நடைபெற்றது. மேலும் 1876ம் ஆண்டு முன்னாள் பேராயர் எட்வர்ட் சார்ஜெண்ட் காலத்தில் ஆலயம் புதுப்பிக்கப்பட்டது.

1932ம் ஆண்டு கனம் G.T. சிமியோன் ஐயரவர்கள் காலத்தில் ஆலயத்தின் இருபுறங்களிலும் அறைகள் ஏற்படுத்தப்பட்டு சிலுவை போன்ற ஆலய அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. மேலும் பரிசுத்த பீடம் (ஆல்டர்) விரிவுபடுத்தப்பட்டது.

அருள்திரு. A. திரவியம் ஜேசுதாசன் ஐயரவர்கள் பணி செய்த காலத்தில் தேவாலயத்தில் உள்ள இருக்கை நீள்வரிசையில் மற்றும் இடையில் உள்ள இருக்கைகள் விஸ்தாரமாக்கப்பட்டு




அப்போதைய பேராயர் Rt.Rtd.Rev.A.G. ஜெபராஜ் அவர்களால் 1967 ஆம் ஆண்டு அக்டோபர் 14 ம் தேதி மறுபிரதிஷ்டை செய்யப்பட்டது.

அருள்திரு. சவரிதாஸ் ஐயரவர்கள் பணி செய்த காலத்தில் கோபுரம் மற்றும் பேராலயம் முழுவதும் புதுப்பிக்கப்பட்டு 1982 ஆம் ஆண்டு மே மாதம் 23 ம் தேதி மகாகனம் பேராயர்.S. தானியேல் ஆபிரகாம் அவர்களால் மீண்டும் அர்ப்பணிக்கப்பட்டது.

அதன்பின்பு அருள்திரு. ஜி. சிம்சன் சிகாமோனி சேகர தலைவராக இருந்த காலத்தில் மகாகனம் பேராயர்.ஜேசன் எஸ். தர்மராஜ் அவர்கள் 1992 இல் பேராலயத்தை விரிவாக்க அடித்தளம் அமைத்தார்கள். ஆலய வேலை 1996 இல் தொடங்கியது ஆலயத்தின் அளவுகள் விகிதம் 98 அடி அகலம் & 130 அடி நீளத்திற்கு மேற்குப்பகுதி வரை விரிவாக்கப்பட்டது. அருள்திரு. ஜே.எஸ். ஆனந்த் ஆசீர் சேகர தலைவராக இருந்தார்கள். புதுப்பிக்கப்பட்ட பேராலயத்தின் மொத்த பரப்பளவு 21,118 சதுர அடி. பேராலயத்தின் உள்ளே 2600 பேர் வரை இருந்து தேவனை ஆராதிக்கலாம்.

அருள்திரு.J.I. சுதர்சன் ஐயரவர்கள் காலத்தில் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு 2015 ம் ஆண்டு மே முதல் தேதியில் மீண்டும் ஜெபித்து அர்ப்பணிக்கப்பட்டது.

பேராலயத்தின் உள்ளே பின் பகுதியில் மிஷனெரிகளின் குடும்பத்தின் நினைவு கல்வெட்டுகள் மற்றும் சில குருமார்களின் குடும்பத்தினர் வைத்த நினைவு கல்வெட்டுகள் உள்ளன.

கனம்பொருந்திய நெல்லை அப்போஸ்தலர் ரேனியஸ் அன்படையாளமான நினைவு கல், பேராயர் எட்வர்ட் சார்ஜெண்ட், அருள்திரு P.P ஷாப்ட்டர் ஐயரவர்கள், பேராயர் ஸ்டீபன் நீல், பேராயர் F.J வெஸ்டன், பேராயர் G.T. செல்வின், பேராயர் A.G ஜெபராஜ், பேராயர் T.S கார்ரெட், கனம். அருள்திரு சாமுவேல் பவுல் ஐயர் அவர்கள், திருமதி. மேரி சார்ஜெண்ட், கனம் தாமஸ் கேம்பர் (CMS மிஷனெரி), அருள்திரு.J.C.M ஹவ்கின்ஸ் ஐயரவர்கள், அருள்திரு., ஈசாக்கு குருபாதம் ஐயரவர்கள், அருள்திரு. குருபாதம் தேவதாசன் ஐயரவர்கள், அருள்திரு. P . ஞானையா சைமன் ஐயரவர்கள், அருள்திரு. G.D. எட்வர்ட் ஐயரவர்கள், அருள்திரு. ஈசாக்கு ஞானாயுதம் ஐயரவர்கள், V.B.S நம் பகுதியில் ஆரம்பித்த மார்கன் அம்மையார் நினைவு கல்வெட்டு.

'பூர்வநாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைக் கவனித்துப்பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான்; உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள்' என்ற வார்த்தை இஸ்ரவேல் ஜனங்களுக்கு சொல்லப்பட்டது. அன்று பூர்வநாட்களை அறிந்து அதனை தங்கள் பிள்ளைகளுக்கு கற்று கொடுப்பது ஒவ்வொரு தகப்பனின் கடமையாக இருந்தது. ஆனால் இன்று அவசர உலகத்தில் பலர் இந்த கட்டளையை மறந்துப் போனவர்களாக இருக்கின்றோம். இன்றைக்கு இந்த உன்னதமான பணியினை வரலாற்று நினைவுகளை எப்படி வரும் சந்ததிகளுக்கு கொண்டு செல்லப்போகின்றோம்.

**மன்னா செல்வகுமார்**

# சங்க பணிகளுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்

## கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் அன்பின் வாழ்த்துக்கள்.

பூர்வ நாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைச் கவனித்துப்பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான், உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள். உபாகமம் 32.7

ஒருங்கிணைந்த திருநெல்வேலி திருச்சபை உருவாகி சுமார் இரண்டரை நூற்றாண்டுகளாகின்றன. பராபரனின் பெரிதான கிருபையினால் இன்று திருமண்டலங்களாகவும், பல நூறு திருச்சபைகளாகவும் பெருகி வந்து கொண்டு இருக்கின்றது. பராபரனுக்கு ஸ்தோத்திரம். திருச்சபை சரித்திரத்தை அறிய வேண்டிய அவாவும் மக்கள் மனதில் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது. இந்நிலையில் **'யார் நமது காரியமாய் போவான்,' இதோ அடியேன் இருக்கின்றேன், என்னை அனுப்பும்'** என்று ஏசாயா தீர்க்கன் முன் வந்தது போல திருநெல்வேலி வரலாற்றை மீள் பதிப்பு செய்யவும், வரலாற்று பணிகளை கள ஆய்வுப் மேற்கொள்ளவும், நின்றுபோன வரலாற்று **'தொடரோட்டத்தை தொடரவும்'** கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட இயக்கமே **'திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்கள் பலரின் அரும்பெரும் முயற்சியினால் தொடங்கப்பட்டது. நம்முடைய வரலாற்றுச் சங்கத்தின் தரிசனத்தில், இறையியல் கல்லூரி மாணவர்கள் பலர் தன்னார்வத்தோடு தங்களையும் இணைத்து செயல்பட்டு வருகிறார்கள். மேலும் தமிழ்நாடு முழுவதும் உள்ள பல வரலாற்று ஆய்வாளர்களுடன் கைகோர்த்து இப்பணியைச் செய்து வருகின்றோம்.

வரலாற்றுச் சங்கமானது கடந்த ஐந்து ஆண்டுகளாக உங்களுடைய ஜெபத்தினாலும் பேராதரவினாலும், மிகச்சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. நமது பத்து அம்ச திட்டங்களில் மாத ஆய்விதழ், பழைய புத்தகங்கள் சேகரித்தல் மற்றும் டிஜிட்டல் செய்யும் பணி, புத்தக மறுப்பதிப்பு பணிகள், நூலகப் பணிகள், மிஷன் சுற்றுப்பயணம், புத்தக வனம் இணைய செயலி, ஆவணப்படம் தயாரித்தல், மிஷன் அருங்காட்சியகம், ஆய்வுக் கருத்தரங்கம் போன்ற பணிகளை கடந்த ஆண்டுகளில் செய்து வருகின்றதை நீங்கள் அறிந்ததே.

இந்த ஆண்டிலும் வரும் ஆண்டுகளிலும் நமது இலக்குகளை அதிகப்படுத்தி இருக்கின்றோம். குறிப்பாக **புத்தக மறுப்பதிப்பு, நூலக கட்டிட பணிகள், மிஷன் அருங்காட்சியகம்** மேற்கண்ட பணிகளை செய்ய வேண்டிய தேவையில் இருக்கின்றோம். இப்பணிகளில் நீங்கள் குடும்பமாகவோ, இயக்கமாகவோ அல்லது தனி நபராகவோ இணைந்து செயல்படவும் பங்கு பெறவும் அன்புடன் அழைக்கின்றோம்.

**நம் சங்கத்தின் பத்து அம்ச செயல்திட்டத்தை நினைவுபடுத்துகின்றோம்:-**

தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் நீண்ட இடைவெளிக்கு பின்பு மீண்டும் ஒரு வரலாறு படைத்துக் கொண்டு இருக்கும் மாத ஆய்விதழ் தான் **'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்'**. கடந்த 2020ம் ஆண்டு ஜுன் மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு தலைப்பைக் கொண்டு பல்வேறு அரிய ஆய்வுக் கட்டுரைகளோடு மிக சிறப்பாக வெளி வந்து கொண்டிருக்கிறது. **மறைக்கப்பட்ட, மறந்த, மறைந்த** மிஷனெரிகள் மற்றும் திருச்சபை வரலாறுகள், கள ஆய்வுகள், பல்வேறு அரிய வரலாற்று பொக்கிஷங்களுடன் தமிழகம் முழுவதும் தொடர்ந்து 1530 க்கு மேற்பட்ட வாசகர்களுடன் வந்து கொண்டு இருக்கின்றது.

- காலவோட்டத்தில் அறுபட்டுக்கிடந்த இசைத் தமிழ் கண்ணிகளைத் தற்கால இசைத் தமிழ் உலகுக்குக் கோர்த்துக் கொடுத்த மாபெரும் இசைத் தமிழ் அறிஞர் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் அவருடைய அளப்பரிய செயல்களை நினைவுகூறும் வகையில் **ஆபிரகாம் பண்டிதர் நினைவு மின்னனு ஆராய்ச்சி நூலகம்** நம்முடைய சங்கத்தின் சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகமானது தமிழ் கிறிஸ்தவ மின்னனு நூலகத்தில் **முதல் நூலகம்** என்ற சிறப்பைப் பெற்றது. இந்த நூலகமானது தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், தமிழ் கிறிஸ்தவ ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் ஒரு புதிய மைல் கல்லாகவும் அமையும். மேலும் அநேக புதிய தமிழ் கிறிஸ்தவ எழுத்தாளர்களை உருவாக்கவும், ஆராய்ச்சியாளர்களை உருவாக்கவும் இது உதவியாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, மறுபதிப்பு செய்து வெளியிடப்படாத கிறிஸ்தவ மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு புத்தகங்களை மறுபதிப்பு செய்து வருகின்றோம். குறிப்பாக நெல்லை திருமண்டல வரலாற்று அறிஞர் பேராசிரியர் அருள்திரு **தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர்** அவர்களுடைய படைப்புகளை மறுபதிப்பு செய்து இன்றைய தலைமுறைகளுக்கு கொண்டு செல்லவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றோம். குறிப்பாக கடந்த ஆண்டு பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் அவர்களின் வரலாற்று சிறப்புமிக்க புத்தகம் அனைத்தையும் மறுபதிப்பு செய்து வருகின்றோம்.

- நம்முடைய வரலாற்று சங்கமும் கிறிஸ்தவ ஆய்வு மற்றும் ஆவணப்படுத்து மையமும் இணைந்து **'புத்தக வனம்'** செயலி செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றது. இந்த செயலி தமிழகத்தில் முதல் முறையாக டிஜிட்டல் முறையில் கையடக்க வடிவில் புத்தகமாக முழு நூலகமாக உங்கள் கைகளில் கொடுத்துள்ளோம். இன்னும் பல ஆயிரம் புத்தகங்களை பதிவேற்றும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும் பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் பெயரிலேயே **நினைவு புத்தக அங்காடி** ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- தமிழக வரலாற்றில் கிறிஸ்தவ மிஷனெரிகளுடைய பங்கு குறிப்பிடத்தக்கது. அந்த மிஷனெரிகள் பணி செய்த இடங்கள், அவர்களுடைய நினைவிடங்கள், தங்கியிருந்த இல்லங்கள், கல்லறைகள், வரலாற்று சிறப்புமிக்க ஆலயங்கள், இரத்த சாட்சிகளாக மரித்த மிஷனெரிகள் பணி செய்த மற்றும் தங்களை இரத்த சாட்சியாக ஒப்புக்கொடுத்த இடங்களை தெளிவான முறையில் பார்வையிடவும், வெளியிடங்களிலிருந்து வரும் மக்களின் வசதிக்காகவும் **Mission Tourist Map** என்று செயலி உருவாக்கி அதன் மூலம் அவர்கள் தங்குமிடங்கள், வழித்தடங்கள் அடங்கிய மின்னியல் கையேடு அமைப்பது.
- வரலாற்றின் பக்கங்களில் மறைந்து கிடக்கும் கீர்த்தனை கவிஞர்கள், உபதேசிமார்கள், முன்னாள் குருமார்களுடைய வரலாற்று பொக்கிஷங்களை சேகரித்து வருகிறோம். மேலும் அவர்களுடைய வரலாற்றுத் தகவல்கள், அவர்களால் உருவாக்கப்பட்ட திருச்சபைகள், கிறிஸ்தவ பாடல்கள் உருவாக்கம் பெற்ற வரலாறுகள், பாடல்களின் வரலாறுகளையும் சேகரித்து அதை மின்னியல் முறைக்கு மாற்றும் பணிகளையும் செய்து கொண்டு இருக்கின்றோம்.
- தமிழ் கிறிஸ்தவ பழைய புத்தகங்களை சேகரித்து மின்னியல் முறையில் ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகத்திலும், பேராசிரியர் **அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் நினைவு புத்தக அங்காடி**யிலும் பதிவேற்றம் செய்வதுடன் புத்தகங்களை தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் விதமாக ஒரு சிறந்த ஆய்வு நூலகம் அமைக்கவும் முயற்சிகளும் மேற்கொண்டு வருகிறோம்.
- மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாற்று சம்பவங்களை அடிப்படையாக கொண்டு ஆவணப்படங்களை வெளியிடுவதற்கான முயற்சிகள் செய்து கொண்டு இருக்கிறோம். கர்த்தருக்கு சித்தமானால், வருகிற ஆண்டு **கிளாரிந்தா, ஏமி கார்மைக்கேல்** மிஷனெரிகளின் வரலாற்றை ஆவணப்படமாக்க திட்டமிட்டிருக்கிறோம்.
- தங்களுடைய வசதியான வாழ்வை தியாகம் செய்து நம் நாட்டிற்கு வந்து கோதுமை மணிகளாய் விதைக்கப்பட்ட மிஷனெரிகள் மற்றும் தன் சொந்த மக்களுக்காக தங்களையே அர்ப்பணித்த நம் இந்திய மிஷனெரிகளின் நினைவிடங்கள் மற்றும் கல்லறைகளை கண்டறிவதுடன் திருச்சபையுடன் இணைந்து பராமரித்து அவர்களுடைய தியாகங்களை குறித்த விழிப்புணர்வை திருச்சபை மக்களுக்கு ஏற்படுத்த பணியாற்றி வருகிறோம்.
- வரலாற்றுச் சங்கம் சார்பில் மிஷனெரிகள் பயன்படுத்திய கலை பொருட்கள் மற்றும் புத்தகங்கள், பைபிள், சேகரித்து வரலாற்று **அருங்காட்சியகம்** அமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம். மிஷனெரிகள் பயன்படுத்திய பொருட்களை சேகரித்து வருகிறோம்.
- கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் மற்றும் மேய்ப்பரின் பயிலகம் சார்பாக கடந்த இரண்டு மாதமாக இணையதள **சீர்திருத்த தமிழ் திருச்சபையின் ஆரம்பங்கள்** என்ற தலைப்பில் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது செவ்வாய்கிழமைகளில் இரவு ஏழு முப்பது மணிக்கு நடைபெற்று வருகின்றன.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, கடந்த 2017ம் ஆண்டு அற்பமாக ஆரம்பிக்கப்பட்ட நம்முடைய திருநெல்வேலி **கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** இது வரையிலும் பல்வேறு தடைகளையும், நெருக்கடிகளையும் கடந்து வந்திருக்கிறது. வரலாற்று ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், வாசகர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் ஆகியோருடைய இடைவிடா ஜெபத்தாலும், ஆதரவாலும், உதவியாலும் நம் திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. மேலும் நம்முடைய மாதாந்திர ஆய்விதழும் தடைகளின்றி வெளி வருகிறது. நம்முடைய கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க செயல்பாடுகள் சிறப்பாக அமைய ஜெபத்தாலும், உடலுழைப்பாலும், பொருளாதார வழியிலும் உதவி வரும் அத்துணை நல்லுள்ளங்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். தொடர்ந்து நாம் செயல்பட வேண்டிய தளங்கள் அநேகமுண்டு. இணைந்து செயல்பட அன்புடன் அழைக்கிறோம். வரலாற்றுச் சங்கத்தின் ஓர் அங்கமாக வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் கருவியாவோம். சர்வ வல்லமை கொண்ட ஆண்டவரின் ஆயுதமாவோம்.



christianhistoricalsociety.in/
**tchsportal.co.in**




செல்: 94433 63760, 99946 32523, 99942 25836

வாடியூர் ரோடு சுரண்டை-627859

Return Requested:

Tamil Printed Book- For Private Cirulation Only

To

**CHRISTAVA VARALATRU SUVADUGAL**
# 2.2.3(4)North Street,
Bungalow Surandai-627859.
Tenkasi District
Tamil Nadu
Ph: 04633 290401
Mo: **91767 80001**

Owned & Published By CHRISTIAN HISTORICAL SOCIETY, Tamil Eduction- For Private Cirulation Only
Editor|G.MUTHAIAH SELVAKUMAR| at 2.2.3(4)North Street, Bungalow Surandai-627859. Tenkasi District Ph: 04633 290401